வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 16.11.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 346 | பக்கங்கள் : 16




# பொதுக் கூட்டங்களுக்கு 30ஆம் திகதிவரை தடை!

## இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் புதிய சுகாதார வழிகாட்டி வெளியீடு

- இன்று முதல் உடன் நடைமுறை
- வீட்டில் 10 பேருக்கு மேல் கூடவும் தடை
- திரையரங்கில் 50% பேருக்கே அனுமதி
- வீட்டை விட்டு வெளியேற வேண்டாம்!
- திருமண நிகழ்வில் 150 பேரே கூடலாம்
- வெளிப்புற கூட்டங்களுக்கும் தடை

கொழும்பு, நவம்பர் 16

பொதுக் கூட்டங்கள், வெளிப்புற கூட்ட நிகழ்வுகளுக்கு எதிர்வரும் 30ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீடுகளில்கூட 10இற்கும் மேற்பட்ட வெளியார் கூடுவதற்கும் தடைவிதிக்கும் புதிய சுகாதார வழிகாட்டி நேற்று வெளியானது.

இந்த சுகாதார வழிகாட்டி இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும், இவை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 15

## கிளிநொச்சியில் விபத்து; மாணவி ஸ்தலத்தில் பலி!

*கிளிநொச்சி, நவ. 16*

பாடசாலை செல்வதற்காக பாதசாரி கடவையில் மாணவிகள் வீதியை கடந்தபோது வாகனங்கள் ஒன்றுடனொன்று மோதி ஏற்பட்ட விபத்தில் மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்று காலை 8.15 மணியளவில் இடம்பெற்றது. இதில், 15



## காரைநகர் விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம், நவ. 16*

காரைநகரில் முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

காரைநகர் டிப்போவுக்கு அண்மையாக இடம்பெற்ற இந்த விபத்தில் காரைநகர் நெய்தலை சேர்ந்தவரே உயிரிழந்தவராவார்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேரக்கப்பட்டுள்ளார். (ஐ-3)

## அருட்தந்தையிடம் 7 மணி நேரம் சி. ஐ. டி. விசாரணை

*கொழும்பு, நவ. 16*

வண. பிதா சிறில் காமினியிடம் 7 மணித்தியாலத்துக்கும் மேலாக குற்றவியல் பொலிஸார் (சி. ஐ. டி.) 15

## 14,000 கொரோனா பலி!

*கொழும்பு, நவ. 16*

கோவிட் தொற்றால் மேலும் 21 பேர் உயிரிழந்தனரென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

இவர்கள் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். இதனால், நாட்டில் கோவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,016 ஆக அதிகரித்துள்ளது.

## எரிபொருள் தட்டுப்பாடு அச்சத்தில் கொள்வனவுக்கு முண்டியடித்த மக்கள்!



*யாழ்ப்பாணம், நவ. 16*

ஷயாழ்ப்பாணத்தில் பெற்றோலை கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முண்டியடித்தனர்.

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முதல் 50 நாட்களுக்கு மூடப்பட்டது. இந்த தகவல் வெளியானது 15

## யாழ்ப்பாணத்தில் பெற்றோல் போதியளவு கையிருப்பிலுள்ளது!

### அரசாங்க அதிபர் அறிவிப்பு

*யாழ்ப்பாணம், நவ. 16*

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதியளவு பெற்றோல் கையிருப்பில் உள்ளது. இதனால் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பெற்றோலை நிரப்ப வேண்டிய அவசியமில்லை", என்று அரசாங்க அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார்.

"சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத் 15

## சமூக விரோத குழு அரசடியில் அடாவடி!

### இளைஞர் படுகாயம்

*யாழ்ப்பாணம், நவ. 16*

யாழ்ப்பாணம் - நல்லூர் - அரசடி மற்றும் பழம்வீதி பகுதியில் வாள்வெட்டு கும்பல் அடாவடியில் ஈடுபட்டது. இதனால் அந்தப் பகுதியில் சிலரின் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டன. 15

## இந்திய அரசுடன் சிறந்த நட்புறவு இலங்கைக்கு தொடர்ந்து உள்ளது

### எதிரணியினரின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் தினேஷ் பதில்

*கொழும்பு. நவ, 16*

இந்தியாவுடன் இலங்கை அரசு சிறந்த நட்புறவை கொண்டிருக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் கூற்றை நிராகரிப்பதாக தெரிவித்த சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, அரசின் சிறந்த வெளியுறவுக் கொள்கை மற்றும் சர்வதேச நாடுகளுடனான சிறந்த நட்புறவாலேயே கஷ்டமான நிலைமையிலும் இலங்கையால் ஒத்துழைப்புக்களை 15



# சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடல்!

## உதய கம்மன்பில அறிவிப்பு

கொழும்பு, நவ. 16

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முதல் 50 நாட்களுக்கு மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளதாக வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி பிரச்னைக்கு தீர்வு கிடைத்து மசகு எண்ணெய் நாட்டுக்கு கிடைக்கும் வரையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், மசகு எண்ணெய் தீர்ந்தமையினால் சப்புஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்தி பணிகள் நேற்று காலை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தனது செயல்பாடுகளை ஆரம்பித்த பின்னர் அதனை நீண்ட காலம் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை இதுவே முதல் தடவையாகும். முன்னதாக 2007 ஆம் ஆண்டு சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்புக்காக ஒரு வாரம் மூடப்பட்டது. (ஐ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளிக்கு உதவி!

கிளிநொச்சி, நவ. 16

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நேற்றுமுன்தினம் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையினரால் அத்தியாவசிய பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஆலோசனைக்கு அமைய வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜாவின் ஏற்பாட்டில் இந்த உதவி திட்டங்கள் வழங்கப்பட்டன.



அத்தியாவசிய பொருட்கள வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜாவுடன் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் உப தவிசாளர் மு.கயன் பிரதேச சபையின் உறுப்பினர்கள் ரமேஷ், வீரவாகுதேவர் மற்றும் வட்டார அமைப்பளர்களும் உடனிருந்தனர். (ஐ)

# சட்டத்திற்கு முரணாக நடக்கிறது சிங்கள அரசு

## முன்னாள் எம். பி. சாடல்

வவுனியா, நவ. 16

சிங்கள அரசு சட்டத்திற்கு - சுற்று நிருபத்திற்கு முரணாக சிங்கள கிராமங்களை தமிழர் தாயகத்துடன் இணைப்பது தமிழர் கிராமங்களை சிங்கள கிராமங்களுடன் இணைப்பது போன்ற பல முரண்பாடான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

சிங்கள குடியேற்றங்களிற்கு எதிராக வவுனியா வடக்கில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அறிக்கைகள் எவையும் கருத்தில் எடுக்கப்படாது தான் நினைத்த போக்கிலே - நினைத்தவாக்கிலே வேலைகள் துரித கதியில்நடக்கிறது. இனப்பரம்பலை மாற்றி அமைக்கின்ற வகையில் இந்தக் குடியேற்றத்திட்டங்கள் நில அபகரிப்புக்கள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படவேண்டும். இது தமிழர்களின் தார்மீகமான ஒரு வேண்டுகோள் - என்றார். (ஐ)

# ரிஷாத் எம்.பியின் சகோதரருக்கு பிணை

கொழும்பு, நவ. 16

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன் கடுமையான நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2019 ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் கைதான அவர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று உயர் நீதிமன்றில் ஆராயப்பட்டபோது, கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

(ஐ)

# விபத்தில் மாணவி உயிரிழப்பு; கிளிநொச்சியில் கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, நவ. 16

கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தில் மாணவி உயிரிழந்தமையை கண்டித்து கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

8 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தால் பாதசாரி கடவையை கடக்க முற்பட்ட மாணவி ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தை கண்டித்து நேற்று சிவில் சமூக



அமைப்புக்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், வீதி ஒழுங்குகளை கண்காணிக்க பொலிஸார் உரிய வேளையில் கடமையில் இருப்பதில்லை என்றும் சாரதிகள் விழிப்புணர்வின்றி செலுத்துகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டினர். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம்
## 16 கார்த்திகை 2021

“காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர நாம் அவளின் இரத்தைத்தையே உறிஞ்சிவிடக் கூடாது”

-கவிஞர் அறிவுமதி.

### கல்வி TV CHANNEL-1 — 16.11.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி TV CHANNEL - 2 — 16.11.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
16.11.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மீண்டும் களத்தில் அமெரிக்கா?

ஒபாமா தலைமையிலான ஜனநாயக கட்சியின் நிர்வாகம், 2012இல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைமீதான பிரேரணைக்கு அனுசரணை வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து, இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் விவகாரம் சர்வதேச அரங்கிற்குள் நுழைந்தது. குறித்த பிரேரணை அமெரிக்க பிரேரணையென்றே பரவலாக அறியப்பட்டது. அப்போது அமெரிக்க இராஜாங்க செயலாளராக இருந்த ஹிலாரி கிளின்ரன், இந்த விடயத்தில் நேரடியாகவே தலையீடு செய்திருந்தார். 2012இல் நிறைவேற்றப்பட்ட பிரேரணை பாரதூரமான ஒன்றல்ல. அந்த நேரத்தில் இதனை விமர்சித்தவர்கள், இது மயிலிறகால் அடிப்பதற்கு ஒப்பானதென விமர்சித்திருந்தனர். ஆனாலும் அந்தப் பிரேரணையை ஏற்றுக் கொள்ள - அப்போதிருந்த மஹிந்த ராஜபக்ஷ மறுத்திருந்தார். இதனால் அழுத்தங்கள் தொடர்ந்தன. அமெரிக்கா மேலும் புதிய பிரேரணைகளுக்கு ஆதரவளித்தது.

2015 இல் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடையும் வரையில் இந்த நிலைமை தொடர்ந்தது. ரணில் - மைத்திரி அரசாங்கம், 2015இல் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இணையனுசரணை வழங்கி ஆதரவளித்ததுடன், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயல்படுவதற்கும் இணக்கம் தெரிவித்திருந்தது. இதனடிப்படையில் சில விடயங்களையும் மேற்கொண்டது. விடயங்கள் வேகமாக நடைபெறாத போதிலும்கூட, சில விடயங்கள் இடம்பெற்றன. இந்த நிலையில் மீண்டும் ராஜபக்ஷக்கள் ஆட்சியைக் கைப்பற்றியதை தொடர்ந்து, விடயங்கள் மீண்டும் பழைய நிலைக்கு சென்றன.

ராஜபக்ஷக்கள் ஆட்சியை கைப்பற்றியிருக்கும் சூழலில், - மீண்டும் அமெரிக்காவில் ஜனநாயக கட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான குடியரசு கட்சி ஆட்சியில் இருந்தபோது, அவர்கள் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறியிருந்தனர். இது குடியரசு கட்சியின் கொள்கை நிலைப்பாடு. இதற்கும் அமெரிக்காவின் மனித உரிமைகள் சார்ந்த கொள்கை நிலைப்பாட்டுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம்தான், இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாமீது தடைவிதித்தது.

ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் அதிகாரத்திற்கு வந்திருக்கும் நிலையில், மீளவும் அமெரிக்கா ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பணியாற்றவுள்ளது. இந்த அடிப்படையில் பைடன், ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான பிரதிநிதியை பிரேரித்திருக்கின்றார். மிஷெயில் டெய்லர் மனித உரிமைகள் பேரவைக்கான பிரதிநிதியாக பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றார். யூத பின்னணியை கொண்டவரான டெய்லரின் தாயார், நாஸி இனப்படுகொலையிலிருந்து தப்பியவராவர். இனப்படுகொலைக்கு எதிரான தீவிர செயல்பாட்டாளரான டெய்லர், 2014இல் ஒபாமாவால், அமெரிக்க ஹொலோகாஸ்ட் கவுன்சில் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கான பிறிதொரு பிரதிநிதியையும் பைடன் பிரேரித்திருக்கின்றார். பெத் வான் ஷக்' (Beth Van Schaack) சர்வதேச குற்றவியல் நீதிக்கான இராஜாங்கத் திணைக்களத்தின் தூதுவராக பிரேரிக்கப்பட்டிருக்கின்றார். இவர் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் ஏற்கனவே கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றார். அதேவேளை அமெரிக்காவை தளமாகக் கொண்டிருக்கும், தமிழ் புலம்பெயர் அமைப்புக்களுடனும் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருக்கின்றார். அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள ஜெனிவா கூட்டத் தொடரின் போது, இவர்கள் நேரடியாக களத்தில் இறங் குவார்கள்.

இலங்கைமீதான மனித உரிமைகள் விவகாரத்தை அடுத்து வரப்போகும் சில ஆண்டுகளுக்கு இவர்களே கையாளவுள்ளனர். அரசாங்கம் தொடர்ந்தும் விடயங்களை தட்டிக் கழித்துச் செல்லுமாக இருந்தால், அமெரிக்காவின் அணுகுமுறைகள் சற்று காட்டமாகவும் மாறலாம். அனைத்தும் அரசாங்கத்தின் அணுகுமுறைகளில்தான் தங்கியிருக்கின்றது. எனினும், தற்போதைய சூழலில் இலங்கையை முற்றிலுமாக தனிமைப்படுத்தும் வகையிலான செயல்பாடுகளை எதிர்பார்க்க முடியாது.

# தாமதம்:
## ஆனால், காலமறிந்த நடவடிக்கை !

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காணும் விதத்தில் சகல தமிழ் பேசும் கட்சிகளையும் ஒன்றிணைத்து செயல்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முன்வந்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை சந்தித்தபோது முக்கியமான அறிவுறுத்தல் ஒன்றை கூறியிருந்தார்.

அரசியல் தீர்வொன்றை காண்பது தொடர்பில் ஒற்றுமை பேணி ஒரே அணியாக செயல்படுமாறு ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா சம்பந்தன் தலைமையிலான அணியினரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்திய வெளியுறவு செயலாளரின் இந்த அறிவுரை இரு விடயங்களை அறியத்தந்திருந்தது. முதலாவதாக தமிழ் தரப்பினர் இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னை தொடர்பாக ஒற்றுமைப்பட்டிருக்கவில்லை என்பதாகும். இரண்டாவதாக இலங்கையில் அரசியல் தீர்வொன்றை தமிழ் தரப்பினர் வலியுறுத்திய போதிலும் அவர்களிடம் ஒற்றுமையான போக்கு காணப்படவில்லை என்பதை வடக்கு - கிழக்கு பிரச்னையில் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற இந்தியா உட்பட சர்வதேச சமூகம் நன்கறிந்து வைத்துள்ளது என்பதாகும்.

சுமார் நான்கு தசாப்த கால அரசியல் வாழ்வில் பலதரப்பட்ட அனுபவங்களையும் பெற்ற ஓர் அரசியல்வாதியாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்கட்சிதலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் விளங்குகின்றார்.

2015ஆம் ஆண்டில் நல்லாட்சி என்றழைக்கப்பட்ட அரசாங்கத்தை அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஏற்படுத்துவதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தலைமை தாங்கியதோடு எதிர்க்கட்சி தலைவராகவும் தாம் பதவி வகிக்கும் விதத்தில் அரசியல் நகர்வுகளை இரா. சம்பந்தன் மேற்கொண்டிருந்தார்.

அன்று ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனகூட வடக்கு - கிழக்கு மக்கள் இருந்திராவிட்டால் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தாம் தோல்வியடைந்திருக்கும் பட்சத்தில் கொன்று புதைக்கப்பட்டிருப்பேன் என்றுகூடத் தெரிவித்திருந்தார்.

இதுதவிர, அன்று பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை 2018ஆம் ஆண்டு ஒக்ரோபரில் பதவியிலிருந்து நீக்கி, முன்னாள் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராகக் கொண்டுவர அன்றைய ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன எடுத்த முயற்சியை முறியடிப்பதிலும் இரா. சம்பந்தன் தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி எடுத்த அரசியல் நகர்வுகளே குறிப்பிடத்தக்கவையாக இருந்தன.

இவ்வாறு ஒரு பலம்மிக்க நிலையில் உள்நாட்டில் மட்டுமல்ல. சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பிரச்னைக்கு ஓர் ஆக்கபூர்வமான தீர்வை எட்டியிருக்க முடியும். அத்துடன், இந்திய மற்றும் சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு தமிழ் பேசும் கட்சிகளைக்கூட ஓரணியில் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுள் நிலவிய ஒற்றுமையின்மையை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூட்டமைப்பிலிருந்தும் வெளியேறியமை எடுத்துக்காட்டியிருந்தது. அதற்கு முன்பதாக வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தது.

வெளிப்பார்வைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒற்றுமையான ஓர் அமைப்பாக இருப்பதுபோல காணப்பட்டாலும் உள்ளே கூட்டமைப்பினுள் தற்போது அங்கம் பெறுகின்ற கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றமையையே அறிய முடிகின்றது.

இருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமது நீண்ட கால அரிசியல் முதிர்ச்சியின் அடிப்படையில் தற்போது சகல தமிழ் பேசும் கட்சிகளையும் ஒண்றிணைத்து தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் புதிய முயற்சியில் ஆர்வம் காட்டியுள்ளார். இது வரவேற்கப்படக்கூடிய ஒரு நகர்வாக இருப்பதோடு வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்க ஒரே அணியில் நின்று குரல் கொடுத்து தீர்வொன்றை காணும் பட்சத்தில், அந்தத் தீர்வு மலையக தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்னைகளுக்கும் ஆக்கபூர்வமான தீர்வைக்காண வழியமைப்பதாக இருக்குமென்றே கருதலாம்.

எனவே, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் பேசும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சி காலம் கடந்த ஒரு நடவடிக்கையாக இருக்கின்ற போதிலும் காலமறிந்ததாகவே காணப்படுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
அரசாங்க விஷயத்தில் திடீரென்று நன்மை ஒன்று கிடைக்கும். பரபரப்பு கூடும். முயற்சி கைகூடும். நெருக்கமானவருக்காக செலவு செய்ய முன்வருவீர்கள்.

**இடபம்**
அலுவலகத்திலிருந்து நல்ல செய்தி ஒன்று வந்து மகிழ்விக்கும். வங்கி வேலைக்காக காத்திருந்தோருக்கு அப்பணி கிடைக்கும். பணியில் உள்ள ஆர்வம் காரணமாக அது பற்றி மேலும் கற்பீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினர்கள் நடந்துகொள்ளும் முறை மனத் திருப்தி தரும். ஆன்மிக நாட்டம் அதிகரிப்பதாகத் தோன்றும். பயம் நீங்கும். உங்களின் புது முயற்சி நல்ல வகையில் செல்லும். உற்சாகம் கூடும்.

**கடகம்**
முயற்சிகள் சற்று நிதானமாகப் பலன் தந்தாலும் முழு நிறைவு தரும். குடும்பத்தினர்களின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். சந்தோஷமான சம்பவங்கள் நிகழ்ந்து நிம்மதி அளிக்கும்.

**சிம்மம்**
எதையும் பலமுறை நன்கு யோசித்து செய்வது அவசியம். வம்பில் தலையிட வேண்டாம். புதிய விஷயத்தை ஒருநாள் தள்ளிப்போடுங்கள். நன்மை வந்து இதயத்தை மகிழ்விக்கும் நாள்.

**கன்னி**
முயற்சி காரணமாக உங்களுக்கு மேன்மையும், உயர்வும் கிடைக்கும். சில நாட்களாக மனதில் இருந்து வந்த மனஅழுத்தம் நீங்கும். குழந்தைகளின் வாழ்வில் திருப்பம் ஏற்பட்டு நிறைவளிக்கும்.

**துலாம்**
உறவினர் ஒருவர் நல்ல செய்தியை சொல்லி உங்களை மகிழ்விப்பார். சுற்றுலா மேற்கொண்டு மகிழ்வீர்கள். உறவினரின் பாச மழையில் நனைவீர்கள். பணியில் இருந்த சங்கடம் தீரும்.

**விருட்சிகம்**
வீடு சம்பந்தமான முயற்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். கொடுத்த வாக்கை காப்பாற்ற சிரமப்பட்டாலும் அதில் வெற்றி பெறுவீர்கள். தொழில் ரீதியாக புதிய ஊர்களுக்கு செல்வீர்கள்.

**தனுசு**
விலகிச் சென்றவரை பற்றி கவலைப்படவேண்டாம். அவரை புறக்கணியுங்கள். ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கை அவசியமா என்று யோசியுங்கள்.

**மகரம்**
உடல் நலனில் கவனம் தேவை. தாயாரால் நன்மை ஏற்படும். மனஉறுதியுடன் செயல்பட்டு கஷ்டத்தில் இருந்து வெளிவருவீர்கள். அனுபவம் மிக்கவரின் ஆலோசனையை கேட்டு நடப்பதன் மூலம் நன்மை.

**கும்பம்**
நீண்ட நாளைய பிரச்னை ஒன்று உங்கள் முயற்சியால் தீரும். பக்குவமாகப் பேசி அனுமதி ஒன்றைப் பெறுவீர்கள். பணியாளர்களுக்கு ஏற்பட்டிருந்த தொல்லை அகலும் நாள்.

**மீனம்**
சுபநிகழ்ச்சி பற்றிய பேச்சுக்கள் நல்ல முடிவை எட்டும். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த செய்தி அரசாங்கத்திடம் இருந்து வரும். நல்ல விஷயம் ஒன்றில் உறவினர்களின் ஒத்துழைப்பு உண்டு.

# 100 கோடி தடுப்பூசி என்ற பிரசாரத்தினால் பேரழிவுகளை மறைக்க பா.ஜ.க. முயற்சி!

## தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ்.அழகிரி சாடல்

சென்னை, நவ.16

இந்தியாவில் 100 கோடி தடுப்பூசிகள் போட்டுவிட்டதாக மேற்கொள்ளும் பிரசாரத்தால் பா.ஜ.க. அரசின் பேரழிவுகளை மூடி மறைத்துவிட முடியாது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கே.எஸ்.அழகிரி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

“கடந்த 20 மாதங்களுக்கு மேலாக கொரோனா தொற்றுப் பரவலினால் கடுமையான பாதிப்புகளை மக்கள் சந்தித்து வருகிறார்கள். பரவல் எண்ணிக்கை சமீபகாலத்தில் படிப்படியாகக் குறைந்து வந்தாலும் ஏற்பட்ட மனித இழப்புகளையும், பாதிப்புகளையும் எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

இத்தகைய கடுமையான பாதிப்புகளுக்குக் காரணம் முதல் அலையின்போது ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் பா.ஜ.க. அரசு எந்த முன்னேற்பாடுகளையும் செய்யாததுதான். இத்தகைய இழப்புகளுக்கு மத்திய பா.ஜ.க. அரசு முழுப் பொறுப்பு ஏற்காமல், கடந்த ஒக்ரோபர் 21ஆம் திகதி நாடு முழுவதும் 100 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டதைக் கொண்டாடுகிற வகையில் பா. ஜ. க. ஈடுபட்டு வருவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிற செயலாகும்.



தொற்றைத் தொலைநோக்குப் பார்வையோடு திட்டமிட்டு எதிர்கொள்ளாத காரணத்தினால் ஏற்பட்ட வரலாறு காணாத பேரழிவுகளை மூடி மறைப்பதற்காக, 100 கோடி தடுப்பூசி போட்டிருப்பதைக் கொண்டாடுகிற வகையில் பல்வேறு நடவடிக்கைகளில் மத்திய பா.ஜ.க. அரசு ஈடுபட்டு வருகின்றது” என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் ஆட்சி மொழியாக தமிழையும் தேசிய நூலக திருக்குறயையும் அறிவிக்குக

## மத்திய அரசை வலியுறுத்தும் தமிழக முதல்வர் ஸ்டாலின்

சென்னை, நவ. 16

தமிழை ஆட்சி மொழியாகவும், திருக்குறளை தேசிய நூலாகவும் அறிவிக்க வேண்டும் என மத்திய அரசை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திர மாநிலம் திருப்பதியில், தென்மாநில முதல்வர்கள் கூட்டம் நடைபெற்றது. இதற்கு உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் தமிழக முதல்வர் ஸ்டாலினால் நேரடியாக கலந்து கொள்ள இயலவில்லை. அத னால், தமிழகப் பிரதிநிதி யாக அமைச்சர் பொன்முடி சென்றிருந்தார். அவர் முதல்வர் ஸ்டாலினின் உரையை அங்கு வாசித்தார்.

முதல்வர் ஸ்டாலின் உரையில் தமிழ் மொழி குறித்து இடம்பெற்ற தகவல்கள் வருமாறு:



தமிழகம் அதன் பழம் பெரும் கலாச்சாரத்திற்கும், வளமான பாரம்பரியத்திற்கும் பெயர் பெற்றது. தமிழக மக்கள் தங்களின் மொழியைப் பெருமித அடையாளமாகக் கருதுகின்றனர். நமது பிரதமரும் கூட தனது உரைகளில் தமிழ் இலக்கியங்களில் இருந்து மேற்கோள்களைச் சுட்டிக் காட்ட மறப்பதில்லை.

இந்தியாவின் செம்மொழிகளில் முதன்முதலாக அந்த அந்தஸ்தைப் பெற்றதும் தமிழ் மொழி தான். உலகின் பழமையான மொழி, வளமான மொழி என்ற வகையில் தமிழ் மொழி ஏற்கெனவே இலங்கை, சிங்கப்பூர் நாடுகளில் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மலேசியா, தென் ஆப்பிரிக்காவில் சிறுபான்மை மொழியாகவும் உள்ளது.

இந்நிலையில் செம்மொழியாம் தமிழ் மொழியை மத்திய அரசு தேசத்தில் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். மேலும், திருக்குறளை தேசிய மொழியாக அறிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம். ஏனெனில் திருக்குறள் ஞானத்தின் ஊற்று.”

இவ்வாறு முதல்வர் உரையில் தமிழ் மொழி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜெய்பீம் திரைப்பட சர்ச்சையால் சூரியாவிடம் 5 கோடி நட்டஈடு கோரும் வன்னியர் சங்கம்

சென்னை, நவ. 16

ஜெய்பீம் திரைப்படத்தில் வன்னியர்கள் குறித்து தவ றாக சித்தரித்ததற்காக 5 கோடி ரூபா நட்ட ஈடு கோரி நடிகர் சூர்யாவுக்கு வன்னியர் சங்கம் கடிதம் அனுப்பியுள்ளது.

இயக்குனர் ஞானவேல் இயக்கத்தில் நடிகர் சூர்யா உள்ளிட்ட பலர் நடித்து அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியான ‘ஜெய்பீம்’ திரைப்படம் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது.

படத்தின் கரு பலராலும் பேசப்பட்ட அதே சமயம், படத்தில் இடம்பெற்றுள்ள சில காட்சிகளும் சர்ச்சையாயின. இதையடுத்து நடிகர் சூர்யாவுக்கு எதிராக சமூக வலைதளங்களில் கண்டங்கள் தெரிவிக்கப்பட்டது. ஜெய்பீம் திரைப்



படத்தில் குற்றவாளி கதாபாத்திரத்துக்கு வைத்திருந்த பெயர் மற்றும் குற்றவாளி கதாபாத்திரத்தின் பின்பக்கம் வன்னியர்களின் அடையாளம் இடம்பெற்றது போன்றவை தொடர்பாக விமர்சனங்கள் எழுந்தன.

இதை தொடர்ந்து அந்த காட்சி நீக்கப்பட்டது. எனினும், இந்த விவகாரம் தொடர்பாக நடிகர் சூர்யாவுக்கு பா.ம.க. மற்றும் வன்னியர் சங்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் நடிகர் சூர்யா, தயாரிப்பாளர் ஜோதிகா மற்றும், இயக்குநர் ஞானவேல் உள்ளிட்டோருக்கு வன்னியர் சங்கம் சார்பில் சட்டத்தரணி மூலமாக கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில், ‘படத்தில் இருந்து சர்ச்சைக்குரிய காட்சியை நீக்க வேண்டும். 7 நாட்களுக்குள் 5 கோடி ரூபாய் அபராதம் வழங்க வேண்டும். வன்னியர் சமூகத்தினரை தவறாக சித்தரித்ததற்காக நாளிதழ் மற்றும் ஊடகங்கள் வாயிலாக மன்னிப்பு கோர வேண்டும். 24 மணி நேரத்திற்குள் மன்னிப்பு கோராவிட்டால் அனைவர் மீதும் சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு தொடரப்படும்’ என்று மனுதாரர் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு



# மீண்டும் வேகமாக பரவும் கொரோனா!

## மக்களுக்கு சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 16

**தொடர்ச்சியாக கடந்த சில தினங்களாக கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் தொகையும் அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் மிகவும் கவனமாகவும் பொறுப்புடனும் செயற்படவேண்டும் என சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.**

குறிப்பாக திருமண வைபவங்கள், மரண நிகழ்வுகள் உள்ளிட்ட நிகழ்வுகள் காரணமாகவே வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றாது மக்கள் அலட்சியம் காட்டி வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலை தொடருமானால் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அதனால் மக்களே பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்கவேண்டிவரும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு தினங்களாக புதிய வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 700 ஐத் தாண்டியுள்ள நிலையில் நேற்று முன்தினம் அது 718 ஆக அதிகரித்துள்ளதாகவும் மரணங்களின் தொகை கடந்த 2 தினங்களாக இருபதைக் கடந்துள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் இந்த வாரத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மரணங்களும் அதிகரித்துள்ளன.

அதற்கிணங்க நாட்டில் இதுவரை மொத்தமாக 5 லட்சத்து 49 ஆயிரத்து 500 கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 5 லட்சத்து 23 ஆயிரத்து 503 பேர் பூரண குணமடைந்துள்ளதாகவும் மேலும் 12,025 பேர் பல்வேறு ஆஸ்பத்திரிகள் மற்றும் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் மரணங்களை பொறுத்தவரையில் கடந்த 13ஆம் திகதி 23 மரணங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் அதற்கு முன்தினம் 23 மரணங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சீன பசளை விவகாரத்தில் இலங்கை அரசு விடாப்பிடி

*மூன்றாம் தரப்பினூடாக மீள்பரிசோதனைக்கும் மறுப்பு*

கொழும்பு, நவ. 16

இலங்கை - சீன இடையே பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியிருக்கும் சீன பசளை விவகாரத்தில் இலங்கை அரசின் விடாப்பிடியான போக்கு தொடர்ந்து வருகிறது.

சீன உரத்தை மூன்றாம் தரப்பினூடாக மீள்பரிசோதனை செய்வதற்கு எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லையென விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சீன நிறுவனம் மீள்பரிசோதனை செய்தாலும், ஆலை தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளின்படி நிராகரிக்கப்பட்ட உரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என அவர் மேலும் கூறினார்.

# முன்னாள் எம்.பிக்கள் உட்பட மூன்று பேருக்கு பிடியாணை!

கொழும்பு, நவ. 16

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரொஜர் செனவிரத்ன ஆகியோரை கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளார்.

வழக்கு நடவடிக்கைகளுக்கான நீதிமன்றில் முன்னிலையாகாததன் காரணமாக இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் சைட் ராட் அல் ஹூசைன் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தபோது, பௌத்தலோக மாவத்தை மற்றும் ஹவ்லொக் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் செய்தமை தொடர்பில் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தாதிய உத்தியோகத்தர்கள் இன்று முதல் போராட்டங்கள்

கொழும்பு, நவ. 16

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக தாதியர்களின் சம்பளப் பிரச்னைகள் மற்றும் பல கவலைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதமையால் இன்று முதல் தொடர்ந்து 10 நாட்களுக்கு தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க அகில இலங்கை தாதியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமது தொழிற்சங்கப் போராட்டத்தின் பின்னரும் அதிகாரிகள் தமது கவலைகளை உதாசீனப்படுத்தினால், ஆயிரக்கணக்கான சுகாதாரப் பணியாளர்களின் பங்கேற்புடன் சுகாதார அமைச்சை முற்றுகையிடத் தயார் என்றும் அது அறிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் போக்குவரத்து மற்றும் விபத்துக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என ஜூலை மாதம் அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்டதாக ஒன்றியத்தின் தலைவர் பிரபாத் பலிப்பன தெரிவித்தார்.

தாதிய உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது குறித்து குழுவொன்று தீர்மானிக்கும் அதே வேளை சீருடை கொடுப்பனவு அதிகரிக்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவ்வாறான வாக்குறுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே தமது தொழிற்சங்கப் போராட்டத்தை தீவிரப்படுத்த நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் பிரபாத் பலிப்பன குறிப்பிட்டார்.

# பாடசாலைகளின் செயற்பாடுகள் அடுத்த வாரம் முதல் வழமைக்கு

கொழும்பு, நவ. 16

அடுத்த வாரம் முதல் பாடசாலைகள் முழுமையாக வழமைபோல் இயங்கும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி அனைத்து தர பாடசாலை மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளும் அடுத்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

கோவிட்-19 அச்சுறுத்தலால் தற்சமயம் ஆரம்பப் பிரிவு மற்றும் 10, 11, 12 மற்றும் 13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாத்திரம் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 82,000 இற்கும் அதிகமானோர் கைது

கொழும்பு, நவ. 16

நாடளாவிய ரீதியில் பொலிஸாரினால் நேற்று முன்தினமும் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி, தனிமைப்படுத் தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த 24 மணித்தியாலங்க ளில் 86 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 82,293 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அத்துருகிரிய லடியா இந்தியாவில் கைது



கொழும்பு, நவ. 16

திட்டமிடப்பட்ட பல குற்றங்களுடன் தொடர்புடைய அத்துருகிரிய லடியா இந்தியாவின் பெங்களூரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவர் பாதாள உலகக்குழு உறுப்பினர் அங்கொடை லொக்காவின் உதவியாளர் ஒருவர் என தெரியவந்துள்ளது.

# மரக்கறி விலை உச்சம்

கொழும்பு, நவ. 16

நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்களுக்குக் கிடைக்கும் மரக்கறிகளின் விளைச்சல் குறைவடைந்துள்ள நிலையில் நுகர்வோரால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மரக்கறிகளுக்கான சில்லறை விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள முதன்நிலை வாரச் சந்தைகள் சிலவற்றில் இந்த நிலை உருவாகியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஒரு கிலோ போஞ்சி மற்றும் கறிமிளகாய் 600 ரூபாவுக்கும், தக்காளி ஒரு கிலோவின் விலை 500 ரூபாவுக்கும், ஒரு கிலோ கரட்டின் விலை 400 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 360 ரூபாவுக்கும், லீக்ஸ் ஒரு கிலோவின் விலை 320 ரூபாவுக்கும், உள்நாட்டு உருளைக் கிழங்கு ஒரு கிலோ 280 ரூபாவுக்கும் விற்பனையாகின்றது. (அ)



# 2,500 பசுக்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, நவ. 16

பால் சுரக்கும் 2 ஆயிரத்து 500 பசுக்களை இறக்குமதி செய்ய உடனடி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேசிய பால் உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்காக 4 நிறுவனங்களுக்காக இந்த பசுக்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்காக, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் 4 பிரதான பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# எதிர்க்கட்சி போராட்டத்தை நடத்த இடமளிக்கமாட்டேன்

## அமைச்சர் சரத் வீரசேகர திட்டவட்டம்



கொழும்பு, நவ. 16

**ஐக்கிய மக்கள் சக்தியினால் இன்று கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள எதிர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

இந்த ஆர்ப்பாட்டத்தின் ஊடாக கோவிட் தொற்று மேலும் பரவுவதற்கான சாத்தியம் உள்ளமையினால், மக்கள் ஒன்று கூடுவதற்கு தன்னால் இடமளிக்க முடியாது என அவர் கூறினார்.

நீதிமன்றத்தினால் வழங்கப்படும் உத்தரவுக்கு அமைய பொலிஸார் நடவடிக்கைகளை எடுப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமது அரசாங்கத்துடன் இணைந்து, வைரஸ் பரவலை தடுப்பதே எதிர்க்கட்சியின் பொறுப்பாக இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் இவ்வாறு ஒன்று திரளும் பட்சத்தில், வைரஸ் பரவும் அபாயம் ஏற்பட்டு, புதிய வைரஸ் அலைகள் ஏற்படும் என சுகாதாரப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் இதன்போது நினைவூட்டினார்.

சட்டவிரோதமாக மக்கள் ஒன்றுகூடுவதை நீதிமன்ற உத்தரவை பெற்று தாம் நிறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு முன்னின்று செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சரத் வீரசேகர கூறினார்.

(அ)

# அரசின் பட்ஜெட் ஐசிங் பூசிய கேக்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 16

உலகத்தை ஏமாற்ற புள்ளி விவரத்தை, இலக்கத்தை மாற்ற அரசாங்கம் முயற்சித்தாலும், அது தோல்வியடைந்த வரவு - செலவுத் திட்டம் என்பது வெளிவரும். ஐசிங் பூசிய கேக் இதுவென்பது வெளியாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிக தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

7 மூளைகளை உடையவர் தான் நிதியமைச்சராக இருப்பதாக சொன்னார்கள். இரட்டைப் பிஜாவுரிமையுடைய அவர் அரசமைப்பில் மாற்றம் செய்துதான் பாராளுமன்றத்துக்கு வந்தார். வரவு - செலவுத் திட்டம் எல்லோரையும் ஆச்சரியமடையவைக்கும் என பஸில் தரப்பினர் சொன்னார்கள்.

உண்மைதான். வரவு - செலவுப் திட்டத்தைப் பார்த்து ஆச்சரியடைந்துள்ளனர். இப்படி ஒன்றுமில்லாத வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதே என்று.

இந்த வரவு - செலவுத் திட்டம் இலங்கை மக்களின் மனநிலையிலிருந்து சமர்ப்பிக்கப்படவில்லையென மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

சிறு வயதில் பாடசாலை மாணவர்கள், ரிப்போர்ட்டில் மாற்றம் செய்வார்கள். 7 புள்ளியை பெற்றால் பின்னால் ஒரு பூச்சியத்தை இட்டு, 70 புள்ளி பெற்றதாக பெற்றோரை சமாளித்துக் கொள்வார்கள். அவர்கள் இலக்கத்தை மாற்றியதால் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக மாறமாட்டார்கள். ஏமாற்றவே அதை செய்தார்கள். அப்படித்தான் வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கம் இலக்கங்களை இட்டுள்ளது.

அரசாங்கம் மில்லியன் கணக்கில் நிதியொதுக்கீடு செய்வதாக பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதட்டினார்கள். முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு 70 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதால் மகிழ்ச்சியடைந்து, சிற்றுண்டிச்சாலைகளிலும் அவர்கள் பிதற்றிக் கொண்டிருந்தார்கள். வீட்டுக்குச் சென்று பார்த்தால்தான் தெரியும். நாட்டில் 8 இலட்சம் முச்சக்கர வண்டிகள் உள்ளன. ஒருவருக்கு நிவாரணமாக 750 ரூபாதான் கிடைக்கும். அதை வைத்து ஒரு ரயராவது வாங்க முடியுமா - என்றார்.

(அ)



# கொயிலாமனை மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 16

இராமாவில் கிராமசேவகர் பிரிவு மற்றும் தாவளை இயற்றாளை கிராமசேவகர் பிரிவை எல்லைப்படுத்தும் வீதியை தனியார் சிலர் அடைத்து வைத்துள்ளமையால் மக்கள் குளத்துக்குள்ளால் தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனைக் கண்டித்து மக்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்கொள்கின்றனர். இடுப்பளவு குளத்து நீருக்குள்ளால் பாடசாலைக்குச் செல்லும் துன்பியலான நிலை உள்ளதை அவதானிக்க முடிகிறது.

சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்திவரும் இந்த வீதியை தனியார் சிலர் தமது காணி எனத் தெரிவித்து குளத்துடன் இணைத்து வீதியையும் மறித்து வேலி அடைத்துள்ளனர்.

இதனால் சுமார் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் வெள்ளத்தின் மத்தியில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த வீதியானது சாவகச்சேரி பிரதேச சபை வீதி வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த வீதி ஊடாக பயணிக்கும் மக்கள் தமது நிலையை காண்பிக்க நேற்றுக் காலை கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# மீண்டும் கூப்பன் முறை!



கொழும்பு, நவ. 16

குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமென நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு ஏதேனும் ஓர் வழியில் நிவாரணங்களை வழங்கக்கூடிய பொறிமுறைமை ஒன்று அவசியமானது என அவர் குறிப்பிட்டார்.

ஊடகவியலளார்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருட்களின் விலை நிர்ணயம் தொடர்பில் வர்த்தக அமைச்சரே தீர்மானம் எடுக்க வேண்டும். அது எனது துறை கிடையாது.

சதொச நிறுவனத்தின் ஊடாக எவ்வாறு நிவாரணங்களை வழங்குவது என்பது குறித்து திட்டமிடப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட கூட்டுறவு கூப்பன் முறைமையை மீள அறிமுகம் செய்ய நேரிடும்-என்றார்.

(அ)

# கொழும்பு - கண்டி வீதிக்கு மறுஅறிவித்தல் வரை பூட்டு



கொழும்பு, நவ. 16

கொழும்பு - கண்டி பிரதான வீதியின், கீழ் கடுகன்னாவ பகுதி தொடர்ந்து மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த வீதியை மறு அறிவித்தல் வரை மூடிவைப்பதற்கு, தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்ஷதுள்ளது.

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக, கடுகன்னாவை பிரதான வீதியில், மண்மேடும், பாறைகளும் சரிந்து வீழ்ந்தன.

இந்த நிலையில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகமும், வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து கள ஆய்வுகளை மேற்கொண்டன.

இதையடுத்து, போக்குவரத்து தடையை அறிவித்து, சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்த முடியும் என நெடுஞ்சாலை அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சாணக்கியன் எம்.பி. தமிழில் ஒன்றும் சிங்களத்தில் வேறொன்றும் பேசுகிறார்

## ஆளுந்தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், பாராளுமன்றத்தில் தமிழில் ஒன்றும், சிங்களத்தில் வேறொன்றும் பேசுகிறார் என ஆளுந்தரப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

நேற்று பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

சாணக்கியன் எம்.பி உரையாற்றியபோது, தமிழிலும், சிங்களத்திலும் உரையாற்றினார்.

தமிழில் உரையாற்றிய போது, யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட வடக்கு - கிழக்கின் உள்ளக அபிவிருத்திக்கு எந்த விசேட திட்டமும் வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கவில்லை - என்றார்.

பின்னர் சிங்களத்தில் உரையாற்றியபோது, கிராமிய ரீதியான அபிவிருத்திக்கு அரசாங்கம் நிதியொதுக்கும் திட்டத்தை விமர்சனம் செய்தார்.

இதன்போது, குறுக்கிட்ட ஆளுந்தரப்பு, சாணக்கியன் தமிழில் ஒன்றும், சிங்களத்தில் வேறொன்றும் உரையாற்றுவதாக சுட்டிக்காட்டினர்.

எனினும், சாணக்கியன் அதை மறுத்தார்.

வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கு விசேட திட்டங்கள் இல்லாமை, மற்றும் அரசாங்கத்தின் தவறான அபிவிருத்தித் திட்டத்தையே விமர்சித்ததாகவும், இரண்டு மொழியிலும் ஒரே கருத்தையே முன்வைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ)

ஈழநாடு



# நீரிழிவு தொற்றுக்குள்ளாகுவோர் எண்ணிக்கை யாழில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 16

**யாழ்.மாவட்டத்தில் நீரிழிவு தொற்றுக்குள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி ம.அரவிந்தன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீரிழிவுச் சிகிச்சை முகாமை ஆரம்பித்து வைத்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது நீரிழிவு நோய் என்பது பெரும் ஒரு அச்சுறுத்தலாக மாறியுள்ளது. குறிப்பாக இளவயதினர் சேர்ந்தவர்களுக்கு நீரிழிவு நோய் அதிகமாக காணப்படுகின்றது.

குறிப்பாக இந்த நீரிழிவு நோய் தொற்றுக்கு உள்ளாகுவோருக்கு ஏனைய பல தொற்று நோய்களும் ஏற்படுவதற்கான சான்றுகள் உள்ளன. குறிப்பாக பாரிசவாதம் மற்றும் ஏனைய பல தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவே இளவயதினர் குறித்த நீரிழிவு நோய் தொடர்பில் அவதானமாக செயற்படவேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் அல்லது தகுந்த வேளைகளில் நீரிழிவுப் பரிசோதனையை மேற்கொண்டு ஆரம்பத்தில் நீரிழிவு நோயை இனங்காணும் பட்சத்தில் குணமாக்க முடியும். அல்லது நோய்த்தொற்று காணப்பட்டால் அதனை முறையாக பின்பற்றி குணப்படுத்த முடியும். எனவே யாழ்.மாவட்டத்தில் நீரிழிவுநோய் தொடர்பில் பொதுமக்கள் சற்று அவதானமாக செயற்படவேண்டும்- என்றார். (அ-03)



உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு

# யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நீரிழிவு சிகிச்சை முகாம்!

யாழ்ப்பாணம், நவ. 16

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண நீரிழிவு கழகம் யாழ் போதனா வைத்தியசாலையுடன் இணைந்து செயற்படுத்தும் நீரிழிவுச் சிகிச்சை முகாம் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இடம்பெறும் நீரிழிவுச் சிகிச்சை முகாமை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த சத்தியமூர்த்தி மற்றும் மற்றும் நீரிழிவு சிகிச்சை நிலைய வைத்தியர் மகாலிங்கம் அரவிந்தன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

யாழ் நீரிழிவுக் கழகத்தின் தலைவர் தி. மைக்கல், செயலாளர் க. கணபதி மற்றும் நீரிழிவு கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நீரிழிவு சிகிச்சை முகாமில் பொதுமக்கள் நீரிழிவுப் பரிசோதனை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள் 30 பேருக்கு அதிவிசேட பாதுகாப்பு!

கொழும்பு, நவ. 16

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 30 பேர் மற்றும் முன்னாள் ஆளுநர்கள் சிலருக்கும் அவ்வாறான பிரபுக்களுக்கான விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு கடந்த 15 மாதங்களாக பிரபுக்களுக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் முன்னாள் நகர சபைத் தலைவர் ஒருவருக்கும் சில வருடங்களாக பிரபுக்களுக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் கடந்த வாரம் தான் அவ்வாறான இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளை அந்தக் கடமையில் இருந்து விலக்கிக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் நடைபெற்றுள்ள பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின்போது இந்த விடயம் சில பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புக்கு இலக்காகியுள்ளதாக மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.

எந்த அடிப்படையில் மேற்படி முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரபுக்களுக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என பின்வரிசை எம்.பிக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்கள், பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய அமைச்சுப் பதவியில் இருந்தவர் களுக்கு அவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை பிரச்னையல்ல என்றும் அவ் வாறு இல்லாதவர்களுக்கு அத் தகைய பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது ஏன் என்றும் அவர்களால் கேள்வி எழுப்பப் பட்டது. (அ)

# பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு நீதிமன்று

கொழும்பு, நவ. 16

ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் தீர்மானித்துள்ளனர்.

அதற்கமைய, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கமைய, குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்குமாறு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு வாழைத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றிடம் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தனர்.

குறித்த கோரிக்கையை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

# அனைத்து வகுப்புக்களுக்கும் கற்றல் அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு, நவ. 16

பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் அடுத்த வாரம் ஆரம்பமாகும்.

கொரோனா அச்சுறுத்தல்கள் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் பகுதியளவில் திறக்கப்பட்டுள்ள நிலையில் முழுமையாக திறக்கப்படுவது தொடர்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அறிவித்துள்ளார்.

கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் அடுத்தவாரம் ஆரம்பமாகும் என்று அவர் கூறினார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.(அ)

# ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட விரிவுரையாளர்களுக்கு தொற்று

கொழும்பு, நவ. 16

தேசிய கல்வி விஞ்ஞான பீட விரிவுரையாளர்களில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய கல்வி விஞ்ஞான பீட விரிவுரையாளர் தொழிற்சங்கத்தினால் கடந்த திங்கட்கிழமை இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கல்வி அமைச்சினால் தேசிய கல்வி விஞ்ஞான பீடத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினூடாக ஆசிரியர் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தும் நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளர்கள் இருவருக்கு மேற்கோள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளான விரிவுரையாளர்களில் ஒருவரின் குடும்பத்தில் அனைத்து அங்கத்தவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தென் மாகாணதிலுள்ள ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

# 10 ஆண்டுகளில் 27,000 பேர் வாகன விபத்துகளால் பலி!

கொழும்பு, நவ. 16

நாடளாவிய ரீதியில் கடந்த 10 வருடங்களில், வாகன விபத்துக்களினால் 27,000 பேர் மரணித்துள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பிலான அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இவ்வருடத்தின் இதுவரை யான காலப்பகுதியில் 1,948 பேர் வாகன விபத்துக்களினால் மரணமடைந்துள்ளனர்.

போக்குவரத்து விதிமுறை கள் தொடர்பில் சாரதிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்காக, எதிர்காலத்தில் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அபராதத் தொகையில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்கும் உடனடியாக அபராதம் செலுத்தும்முறை மற்றும் சாரதி திறன் மதிப்பெண் முறையை விரைவில் அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார்.

இதன்போது கருத்துரைத்த வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, வீதி ஒழுக்கம் தொடர்பில் சாரதிகளுக்கு பயிற்சியளிக்கும் வகையில் பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சாரதி களுக்கு இரண்டு வார பயிற்சித் திட்டத்தை வழங்கவுள்ளோம் - என்றார்.

# சமையல் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு இன்று முதல் தீர்வு கிடைக்கும்

கொழும்பு,நவ.16

சமையல் எரிவாயுவின் விநியோகத்தில் உள்ள பிரச்னைகளுக்கு இன்று முதல் தீர்வு கிடைக்கும் என்றும் இன்று முதல் வழமை போன்று விநியோக நடவடிக்கைகள் இடம்பெறும் என்று லிற்றோ காஸ் நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்ஹ தெரிவித்துள்ளார்.

தற்போது மேல் மாகாணத்தில் சமையல் எரிவாயுவின் விநியோகம் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், எரிவாயு உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

எரிவாயு உற்பத்தி நடவடிக்கைகள் 4 நாட்கள் தடைப்பட்டதன் காரணமாகவே சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதியும் புலம்பெயர் தமிழரும்

கலாநிதி அமீரலி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரோனியோ குற்றேராஸ் அவர்களை நியூயோர்க் நகரில் சந்தித்துப் பேசியபோது, இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்கப் புலம்பெயர் தமிழருடன் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயாரென உறுதிமொழி கூறியுள்ளதை அறிந்தவர்கள் ஆனந்தம் அடைந்திருப்பர். இந்த உறுதிமொழியைப்பற்றித் தொடர்ந்து அலசுவதற்கு முன்னர் புலம் பெயர் தமிழரை வழமைபோன்று தோற்றுப் போன விடுதலைப் புலிகளின் விரத்தியடைந்த எச்சங்கள் என்று கருதாமல் இலங்கைத் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களையும் ஒரு பொருட்டாக ஏற்கவேண்டும் என்ற ஞானம் அவருக்கு இப்போதாவது தோன்றியதை மகிழ்வுடன் ஏற்கவேண்டும். அதை ஏற்றுக்கொண்டு அடுத்த கேள்வியை முன்வைப்போம். இவருடைய உறுதிமொழி உளமார்ந்த நம்பிக்கையின் வெளிப்பாடா அல்லது உலக நிறுவனத்தைத் திருப்திப்படுத்துவதற்காக கையாளப்பட்ட ஓர் ஏமாற்று வித்தையா? கடந்த இரண்டு ஆண்டுகளின் வரலாற்றைப் புரட்டினால் உண்மை புலப்படும்.

கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில நாட்களுள் அவர் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணம் இந்தியாவுக்கே. நானூறு மில்லியன் டொலர்களைக் கடனாகப் பெறுவதற்காகச் சென்ற இப்பயணத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்திய உரையாடலில் இலங்கை திரும்பியதும் இந்திய அழுத்தத்தினால் இலங்கை அரசியற் சட்ட யாப்பில் இணைக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தை உடன் அமுல் நடத்துவதாக வாக்குறுதி அளித்தாரல்லவா? ஆனால் நடந்ததென்ன? இலங்கை திரும்பியதும் அந்த வாக்குறுதியை முற்றாக நிராகரித்து பொரும்பான்மை இனம் அதனை விரும்பாதென்று காரணமும் கூறினார்.

அதன் பின்னர் இவ்வருடம் ஜூன் மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் தமிழர் பிரச்சினைகள பற்றிப் பேச்சுவார்தைகளை ஆரம்பிக்க அழைப்பொன்றை விடுத்தார். அந்த அழைப்பை விடுத்த மறுநாளே ஜனாதிபதியின் பின்வாசலுக்குள் எழுந்த எதிர்ப்பினால் அந்த அழைப்பை வாபஸ் பெற்றுத் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றினார். மூன்றாம் முறையாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மொட்டுக் கட்சியின் இராஜதந்திரியாக விளங்கும் கோட்டாவின் இளையோன் பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் தமிழ் தலைவர்களுடனான போச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்ற ஒரு வதந்தி அரசு தரப்பிலிருந்தே வெளியாகியது. இதுவரை நடைபெற்றது ஒன்றுமே இல்லை.

இப்பொழுது ஐ. நாவின் செயலாளருக்கும் ஒரு வாக்குறுதி. அதுவும் இங்குள்ள தலைவர்களுடன் அல்ல, புலம்பெயர் தமிழருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக. இவற்றையெல்லாம் நோக்கும்போது மட்டக்களப்பு முஸ்லிம்களிடையே நிலவும் ஒரு நாட்டுப்பாடலின் பின்வரும் வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன: கதைப்பார் கதையெல்லாம் கல்லுருகி நெல்விளைய, சிரிப்பார் கொடுப்பாலே இவர் சொல்லையுமா நம்புவது.

இவற்றிலிருந்து இறுதியாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி உலக நிறுவனமொன்றை ஏமாற்றுவதற்கென்பது தெளிவாகின்றது. ஆனாலும் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று புலம்பெயர் தமிழரை ஜனாதிபதி ஒரு பொருட்டாக மதித்ததே தமிழருக்குக் கிடைத்த ஒரு வெற்றி எனலாம். அந்தத் தமிழரின் சர்வதேச அழுத்தங்கள் இலங்கை அரசுக்குத் தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளதையே இது உணர்த்துகிறது. கடந்த வருடம் ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைச் சபையினால் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கும், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் ஐரோப்பிய ஏற்றுமதிகளுக்கு வழங்கும் விசேட வரிச்சலுகைகளை நீக்கப்போவதாக அச்சுறுத்துவதற்கும், அமெரிக்க சட்ட சபை இலங்கையின் வடக்கையும் கிழக்கையும் தமிழரின் தாய்ப்பூமியாக பிரகடனப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கும் பின்னால் புலம்பெயர் தமிழரின் அழுத்தங்கள் உள்ளன என்பதை இலங்கை அரசு உணர்ந்துள்ளது. அந்த அழுத்தங்கள் தொடரும்.

அத்துடன் இன்னுமொரு கோணத்திலிருந்து புலம்பெயர் முஸ்லிம்களின் சர்வதேச அழுத்தங்களும் புதிதாக உருவாகியுள்ளன. அதனச் சில மாதங்களுக்கு முன்னர் உலக முஸ்லிம் கூட்டுறவுத்தாபனம் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றிய ஒரு பிரேரணை தெளிவாக்கியது. அதனாலேதான் இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கடந்த வாரம் அத்தாபனத்தின் செயலாளருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு ஓர் அறிக்கையையும் வெளியிட்டிருந்தார். புலம்பெயர் இலங்கை முஸ்லிம்களின் ஐ. நா. ஆலோசனை சபையொன்றும் வாஷிங்டனில் இயங்குவதை இலங்கை அரசும் அறியும். இன்று புலம்பெயர் சிங்கள மக்கள்கூட ராஜபக்ச அரசுக்கெதிரான சர்வதேச அழுத்தங்களை கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையின் சர்வதேச உறவுகள் பல பிரச்சினைக்குள்ளாகி இருப்பதால் அந்த உறவுகள் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தி வளர்ச்சி காண்பதற்குத் தடையாய் அமைந்துள்ளன. வெளிநாட்டு முதலீடுகளும் உள்நாட்டு ஏற்றுமதிகளுக்கான சந்தைகளும் இல்லாமல் இலங்கையின் திறந்த பொருளாதாரம் மீட்சிகாண முடியாது. இதனை உணர்ந்ததன் விளைவே ஜனாதிபதியையும் பிரதமரையும் வெளிவிவகார அமைச்சரையும் கடந்த சில வாரங்களாக முறையே அமெரிக்காவுக்கும் இத்தாலிக்கும் ஜெனிவாவுக்கும் பறந்துபோகச் செய்தது. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமோ!

அவைபோக, அண்மையில் துருக்கியுடனும் வளைகுடா நாடுகளின் அமைச்சர்களுடனும் இலங்கையின் அமைச்சர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர். கடனுதவி கேட்டும், இலங்கையில் அந்நாடுகளை முதலீடு செய்யுமாறும், இலங்கையருக்கான தொழில்வாய்ப்புகளை அந்நாடுகளில் அதிகரிக்குமாறும், சலுகை விலையில் எண்ணெய் வழங்குமாறுமே அந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. இது தொடர்டபாக இலங்கையின் அமைச்சர்கள் ஓர் உண்மையை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். இவையனைத்துமே முஸ்லிம் நாடுகள். வியாபாரம் வேறு மதம் வேறென்றாலும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவை முற்றாகத் துண்டிக்கப்பட்டதெனக் கருதமுடியாது. அதைத்தான் உலக முஸ்லிம் கூட்டுறவுத்தாபனத்தின் கண்டனம் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. உள்நாட்டு முஸ்லிம்களை நசுக்கிக்கொண்டு வெளிநாட்டு முஸ்லிம்களிடமிருந்து பொருளாதாரச் சலுகைகளை எதிர்பார்ப்பது பூரண பலனளிக்காது. புலம்பெயர் இலங்கை முஸ்லிம் சமூகம் தமிழ்ச் சமூகத்தைவிடச் சிறியதெனினும் அவை இரண்டினதும் கூட்டு அழுத்தங்கள் பலமானவை.

எதுவாகினும் புலம்பெயர் தமிழரின் சர்வதேச அழுத்தங்கள் இரண்டாம் உலக யுத்தத்தின் முன்னர் யூத மக்கள் ஐரோப்பியருக்குக் கொடுத்த அழுத்தங்கள்போல் வலுவடையத் தொடங்கியுள்ளன. ஆனால் அந்த அழுத்தங்களின் முழுப் பயனையும் இலங்கைவாழ் தமிழினம் அனுபவிக்க வேண்டுமாயின் இங்குள்ள தமிழ் தலைமைத்துவங்கள் தமக்கிடையேயுள்ள பிரிவினைகளை நீக்க வேண்டும். உள்ளே வெடிப்பிருக்கையில் வெளியே சாந்து பூசி என்ன பயன்? ஆகவே மலையகத் தமிழரையும் உள்ளடக்கிய இரு சிறுபான்மை இனங்களும் ஒன்று சேர்ந்து நாம் எல்லாரும் இலங்கையர் என்றும் இந்த நாடு நம் யாவருக்கும் சொந்தம் என்ற ஒரே குரலோடு போராடும் பெரும்பான்மை இனச் சக்திகளுடன் இணைந்தால் புலம்பெயர் சமூகங்களின் சர்வதேச அழுத்தங்க ளுடன் ராஜபக்ஷ அராஜகத்தை தோற்கடித்து நாட்டையும் அதன் மக்களையும் விடுவித்து பொருளாதாரத்தையும் மேம்படுத்தலாம். ■



**“ புலம்பெயர் தமிழரின் சர்வதேச அழுத்தங்கள் இரண்டாம் உலக யுத்தத்தின் முன்னர் யூத மக்கள் ஐரோப்பியருக்குக் கொடுத்த அழுத்தங்கள்போல் வலுவடையத் தொடங்கியுள்ளன. ஆனால் அந்த அழுத்தங்களின் முழுப் பயனை யும் இலங்கைவாழ் தமிழினம் அனுபவிக்க வேண்டுமாயின் இங்குள்ள தமிழ் தலைமைத்து வங்கள் தமக்கிடையேயுள்ள பிரிவினைகளை நீக்க வேண்டும்.**

# கிளாஸ்கோவில் நிறைவேறிய புதிய பருவநிலை ஒப்பந்தம்!

## உலக நாடுகள் சாதிக்குமா?

### ஒப்பந்தத்தில் எட்டப்பட்ட முக்கிய மைல்கல்கள்

- 1.5 டிகிரிக்கு மேல் புவி வெப்பநிலை உயராமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களை அடுத்த ஆண்டு மீண்டும் மறுபரிசீலனை செய்வது.
- முதல் முறையாக நிலக்கரி பயன்பாட்டை குறைப்பதற்கு ஒப்புக்கொண்ட சர்வதேச ஒப்பந்தம்.
- வளரும் நாடுகளுக்கு மேலும் அதிக நிதியுதவி.


மாநாட்டின் போது பிரிட்டன், அமெரிக்கத் தலைவர்கள் சந்தித்த போது...

**பால் ரின்கன்**

புவியில் வாழும் உயிர்களை அச்சுறுத்திவரும் ஆபத்தான பருவநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவது தொடர்பாக புதிய உலகளாவிய ஒப்பந்தம் நிறைவேறியது.

பிரிட்டன் நாட்டின் கிளாஸ்கோ நகரில் கடந்த இரண்டு வாரங்களாக நடந்துவந்த சிஓபி26 என்று அறியப்படும் ஐ.நா. பருவநிலை உச்சி மாநாட்டின் இறுதியில் இந்த ஒப்பந்தம் வடிவம் பெற்றது.

நிலக்கரி பயன்பாட்டை குறைப்பதற்கு வெளிப்படையாக ஒப்புக்கொண்ட முதல் பருவநிலை ஒப்பந்தம் இதுதான். பசுமை இல்ல வாயுக்களை உமிழும் மோசமான புதைபடிவ எரிபொருள் நிலக்கரி என்பது குறிப்பிடத்தக்கது.

பசுமை இல்ல வாயுக்களை வெளியிடுவதை அவசரமாக குறைக்கவேண்டும் என்றும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. அத்துடன் பருவநிலை மாற்றத்தின் தீய விளைவுகளை எதிர்கொள்ள ஏழை நாடுகளுக்கு பணக்கார நாடுகள் நிதியுதவி செய்ய வேண்டும் என்றும் இந்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொழிற்புரட்சிக் காலத்துக்கு முந்தைய நிலைமையோடு ஒப்பிடும் போது புவியின் சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது பருவநிலை மாற்றம் தொடர்பான தாரக மந்திரமாக மாறியுள்ளது.

ஆனால், இந்த அளவில் பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த போதுமான வாக்குறுதிகள் இந்த புதிய பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை.

**இந்தியா எதிர்ப்பு**

நிலக்கரி பயன்பாட்டை படிப்படியாக ஒழிக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளும் பிரிவுகள் தொடக்க நிலை பேச்சுவார்த்தைக்கான வரைவு அறிக்கைகளில் இடம் பெற்றிருந்தன. ஆனால், இந்தியா தலைமையில் பல நாடுகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இதையடுத்து ஒப்பந்தம் பல திருப்பங்களுக்குப் பிறகு நிறைவேறியது.

தங்கள் வறுமை ஒழிப்பு, வளர்ச்சித் திட்டங்கள் போன்றவை நிறைவேறாத நிலையில் எப்படி வளரும் நாடுகள் தங்கள் நிலக்கரி, புதைபடிவ எரிபொருள்களுக்கான மானியத்தை ஒழிக்க வாக்குறுதி அளிக்க முடியும் என்று இந்தியாவின் பருவநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ் கேள்வி எழுப்பினார்.

இறுதியில் நிலக்கரி பயன்பாட்டை "படிப்படியாக ஒழிப்பது" என்ற வாசகத்துக்குப் பதிலாக "படிப்படியாக நிலக்கரி பயன்பாட்டை குறைப்பது" என்ற வாசகத்தை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டன. ஆனால், இதற்குப் பல நாடுகள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டன.

ஆனால், அடுத்தடுத்து நடந்துவிட்ட நிகழ்வுகளுக்கு தாம் மிகவும் வருந்துவதாக மாநாட்டுத் தலைவர் அலோக் சர்மா தெரிவித்தார். ஒப்பந்தத்தை முழுமையாக காப்பாற்றவேண்டியது இன்றியமையாதது என்று மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் கூறியபோது அவர் கண் கலங்கிவிட்டார்.

எதிர்காலத்தில் வரலாற்றை திரும்பிப் பார்க்கும்போது, பருவநிலை மாற்றத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் தொடக்கமாக கிளாஸ்கோ மாநாடு இருக்கும் என்றார் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன்.

"பருவ நிலை மாற்றத்தை கட்டுப்படுத்த வரும் ஆண்டுகளில் நிறைய செய்யவேண்டி இருக்கிறது. ஆனால், முன்னோக்கி வைத்த ஒரு பெரிய அடியாக இந்த ஒப்பந்தம் இருக்கிறது. நிலக்கரி பயன்பாட்டை குறைத்துக் கொள்வதற்கு ஒப்புக்கொண்ட முதல் சர்வதேச ஒப்பந்தமாக இது இருக்கிறது. இது மிகவும் முக்கியம்" என்றார் அவர்.

இந்தப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய முடிவை எடுப்பதாக கிளாஸ்கோ மாநாடு இருந்துவிடாது என்பது தெரிந்ததே என்று பருவநிலை மாற்றத்துக்கான ஐ.நா. தூதர் ஜான் கெர்ரி கூறினார். ஆனால், முதல் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என பொருள்படும்படி அவர் கருத்து தெரிவித்தார்.

"புவிக்கோள் ஒரு நூலிழையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. பருவநிலை பேரழிவின் கதவை நாம் இன்னும் தட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே அவசரகால முனைப்புக்கு செல்லவேண்டும். இல்லாவிட்டால், நிகர பூஜ்ஜிய உமிழ்வு நிலையை அடைவதற்கான வாய்ப்பு பூஜ்ஜியம்தான்," என்று தெரிவித்தார் ஐ.நா. தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ்.

கார்பன் உமிழ்வை மேலும் பெரிய அளவு குறைப்பதற்கான வாக்குறுதிகளை அளிப்பதற்காக அடுத்த ஆண்டு உலக நாடுகள் மீண்டும் கூட வேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்களை முழுமையாக நிறைவேற்றினால்கூட அது புவி வெப்பநிலை 2.4 டிகிரி செல்ஷியசுக்கு மேல் உயராமல் பாதுகாப்பதற்கு மட்டுமே போதுமானது. ஆனால், இலக்கு என்னவோ 1.5 டிகிரியை தாண்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது தான்.

புவியின் சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்ஷியசுக்கு மேல் அதிகரிக்குமானால், பல பத்து லட்சம் மக்கள் கடும் வெப்பம் போன்ற தீவிர விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

"நாம் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தில் நிலக்கரி மற்றும் புதைபடிம எரிபொருள் தொடர்பில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி மிகவும் மென்மையாக இருப்பது குறித்து எங்கள் தீவிர அதிருப்தியை வெளிப்படுத்த விரும்புகிறோம். 1.5 டிகிரி இலக்கினை அடைவதற்கு இது உதவாது. அந்த இலக்கை அடைவதை இது கடினமாக்கும்," என்று சுவிட்சர்லாந்து சுற்றுச்சூழல் அமைச்சர் சிமோனெட்டா சொம்மாருகா தெரிவித்தார்.

நிலக்கரி தொடர்பான வாக்கியம் மென்மையாக இருந்தாலும், முதல் முறையாக இது போன்ற ஒரு ஐ.நா. ஆவணத்தில் நிலக்கரி பயன்பாட்டை குறைக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், இந்த ஒப்பந்தம் ஒரு வெற்றி என்று பல பார்வையாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

உலகில் கரியமில வாயு உமிழ்வில் 40 சதவீதம் நிலக்கரியால் நிகழ்கிறது. எனவே புவி வெப்பநிலை 1.5 டிகிரிக்கு மேல் உயராமல் தடுக்கவேண்டும் என்ற முயற்சியில் நிலக்கரி தொடர்பான விவாதம் மைய இடத்தைப் பிடிக்கிறது.

1.5 டிகிரி இலக்கை அடைவதற்கு 2030ல் உலக அளவிலான கார்பன், பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு 45 சதவீதம் குறைந்திருக்க வேண்டும். 2050 அளவில் நிகர உமிழ்வு பூஜ்ஜியமாக இருக்கவேண்டும்.


-பி.பி.சி.


பருவநிலை மாற்றத்தினால் கடல்மட்டம் உயரும் ஆபத்தை உணர்த்தும் வகையில் துவாலு நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் சைமன் கோஃப் கடலில் இருந்து தனது கிளாஸ்கோ மாநாட்டு உரையைப் படித்தார்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

23) 

24) காலைப் பொழுதில் கடற்கரை நோக்கிச் சென்ற திபாணுஜாவின் நிழல் அவளது வலது கைப்பக்கம் விழுந்தது. எனின், அவள் செல்லும் திசைக்கு எதிர்த் திசை யாது?

1) தெற்கு 2) வடக்கு 3) மேற்கு

25. பென்சில் ஒன்றின் விலையின் இரு மடங்கு விலை கொண்டது பேனையின் விலையாகும். பேனையொன்றின் விலையின் இரு மடங்கு விலை கொண்டது அடிமட்டத்தின் விலையாகும். எனின், அடிமட்டத்தின் விலையின் எத்தனை பங்கு விலை கொண்டது பென்சிலின் விலையாகும்.

1) $\frac{1}{2}$ 2 $\frac{1}{8}$ 3) $\frac{1}{4}$

26. ராஜாவிடம் 4 வாகனங்கள் உள்ளன அவற்றில் இரண்டு சிவப்பு நிறமானவை மிகுதி இரண்டு வாகனங்கள் தொடர்பாகக் கூறக் கூடிய கூற்றுக்களில் சரியானது

1) ஒன்று மஞ்சள் நிறமாகவும் மற்றயது நீல நிறமானதாகும்
2) ஏனையவை இரண்டும் சிவப்பு நிறமல்லாதவையாகும்
3) ஏனையவை பச்சையாக இருக்கலாம்

❖ பின்வரும் சொற்களுக்குரிய இரகசியக் குறியீட்டின் பெறுமானத்திற்கேற்ப 27ஆம், 28ஆம் வினாக்களிற்கான விடைகளைத் தெரிவு செய்க

அக்கம் =15 அகம் = 9 அகரம் =14 எனின்


27. 'ர' எழுத்திற்குரிய பெறுமானம் யாது?

1) 3 2) 4 3) 5

28. 'க்' எழுத்தக்குரிய பெறுமானம் யாது?

1) 6 2) 5 3) 4

❖ பின்வரும் சதுரமுகித் தாயக்கட்டையை அவதானித்து 29ஆம் 30 ஆம் வினாக்களிற்கான விடைகளைத் தெரிவு செய்க.




29. எந்த எழுத்துச் சோடிகள் தாயக் கட்டையின் எதிர் பக்கங்களில் எழுதப்பட்டிருக்கும் ?

1) B , D 2) A , F 3) A , E

30. குறித்தவொரு சந்தர்ப்பத்திலே தாயக்கட்டையின் முன்பக்கம் , பக்க முகம், மேற்பக்கம் ஆகியவற்றில் தெரியக்கூடிய மூன்று எழுத்துக்களும் எவை ?

1) C , F , B 2) D , B , C 3) E , C , D


31. 2020ஆம் வருடம் ஜனவரி முதலாம் திகதி புதன்கிழமை எனின் 2024ம் வருடத்தின் முதலாவது புதன்கிழமையின் திகதி யாது ?

1) 1 2) 2 3) 3

32. கடிகாரம் ஒன்று ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அந்த மணித்தியாலத்தின் எண்ணிக்கைக்கேற்ப மணி ஒலிக்கும் அது 6 மணியைக் காட்டும் போது 6 தடவைகள் மணி ஒலிக்க 30 செக்கன்கள் எடுத்தன எனின் 10 மணியைக் காட்டும் போது மணி ஒலிக்க செலவாகிய நேரம் எவ்வளவு ?

1) 45 செக்கன்கள் 2) 54 செக்கன்கள் 3) 27 செக்கன்கள்

❖ பின்வரும் உருவினைக் கொண்டு 33ஆம், 34ஆம் வினாக்களிற்கான விடையினைத் தெரிவு செய்க.



33 .உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை நீக்கிய போது. அகற்றப்பட்ட சிறிய குற்றிகள் எத்தனை?
1) 5
2) 7
3) 9

# தடைகளைத் தகர்த்தெறிந்து இன்று கொழும்பைச் சுற்றிவளைப்போம்!



## ராஜித எம்.பி. சூளுரை

கொழும்பு, நவ. 16

**"கொரோனாவுக்கு மத்தியிலும் அன்று இந்திய விவசாயிகள் டில்லியைச் சுற்றிவளைத் தனர். அதே போல் இன்று நாம் கொழும்பைச் சுற்றிவளைப்போம். எந்தவொரு தண்டனையையும் ஏற்கத் தயார் நிலை யிலேயே இருக்கின்றோம்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"இந்த அரசுக்கு எதிராக இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு, ஹைட் பார்க் மைதானத்தில் ஐக்கிய மக்கள் சக்தியால் எதிர்ப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதனை குழப்புவதற் காகக் கொரோனாச் சட்டத்தை அரசு கையில் எடுத்துள்ளது.

வழமையாகக் கட்டுப்பாடு களை விதிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரே அரசிடம் கோருவார். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்துக்கு அஞ்சி, புதிய கட்டுப் பாடுகளை அறிவிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அரசு அறிவித்துள்ளது.

எத்தடை வரினும் எமது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. அன்று டில்லியை இந்திய விவசாயிகள் சுற்றிவளைத்தது போல் கொழும்பை நாம் சுற்றிவளைப் போம். இதற்காக சிறைச்சாலை செல்ல வேண்டிவரும். அதற் கும் நாம் தயார். சிறைச்சாலை செல்லாமல் அரசியல் செய்ய முடியாது. ஹைட் பார்க்கில் அனுமதி மறுக்கப்படுமானால் முழு கொழும்பையும் ஹைட் பார்க்காக மாற்ற வேண்டி வரும்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்று அனைத்து மக்களும் அரசுக்கான தமது எதிர்ப்பை வெளியிட வேண்டும்" - என் றார். (இ)

## 'பட்ஜெட்'டில் திருத்தங்களை முன்வைக்க சு. க. யோசனை

வரவு - செலவுத் திட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சில திருத்தங்களை முன்வைக்கலாம் என்று அறியமுடிகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மத்திய செயற் குழுக் கூட்டம் இன்னும் ஓரிரு நாட்களில் நடைபெறவுள்ளது என அதன் தலைவர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

2022ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் ஆராய்ந்து, அதனை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது தொடர் பில் தீர்மானமொன்றை எடுப் பதற்கும், பாதீட்டில் முன்வைக் கப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய்வதற்காகவே விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. வரவு - செலவுத் திட் டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், இது சாதகமான பாதீடு எனச் சுட்டிக்காட்டியி ருந்தனர். எனவே, சுதந்திரக் கட்சி பாதீட்டை ஆதரிப்பது உறுதி எனவும், எனினும், சில திருத்தங் களை முன்வைக்கலாம் எனவும், அதற்காகவே கூட்டம்கூடுகின்றது எனவும் தெரியவருகின்றது. (இ)

# மௌனம் காக்கமாட்டோம் தொடர்ந்து போராடுவோம்

## அரசுக்கு பங்காளிகள் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 16

"மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மீறப்படு வதால்தான் அரசில் இருந்து கொண்டு எதிரணிப் பணியைச் செய்கின்றோம். தொடர்ந்தும் போராடுவோம். மௌனம் காக்கமாட்டோம்."

- இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

"யுகதனவி ஒப்பந்தம் மற் றும் திருகோணமலை உடன் படிக்கை ஆகியவற்றுக்கு எமது எதிர்ப்பை வெளியிட்டுள் ளோம். இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு மாறாது. பின்வாங்கவும் மாட்டோம். அடுத்த அமைச்சரவைக் கூட் டத்திலும் இது தொடர்பில் பேசுவோம்.



20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும்போது அமைச்சரவையில் மௌனம் காத்து, வாத விவாதங்களில் பங்கேற்காமல் செய்த தவறை மீண்டும் செய்யமாட்டோம். அதற்காகவே தற்போது எமது கருத்துகளை வெளிப்படையாக முன்வைத்து வருகின்றோம்.

அரசை சரியான பாதையில் வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு உள்ளது" - என்றார். (இ)

# தேர்தலில் சுதந்திரக் கட்சி இனித் தனித்தே போட்டி

## கட்சியின் அநுராதபுரம் மாவட்டக்குழு தீர்மானம்

கொழும்பு, நவ. 16

"வெற்றியோ, தோல்வியோ எதுவாக இருந்தாலும் பரவா யில்லை. எதிர்வரும் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனிக்கட்சியாகப் போட்டியிட வேண்டும்."


- இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அநுராத புரம் மாவட்டக் குழு வலியுறுத் தியுள்ளது.

இது தொடர்பில் தீர்மான மும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் அநுராதபுரம் மாவட்டக் குழுக் கூட்டம் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"அரசால் எமது கட்சிக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி கள் மீறப்பட்டுள்ளன. புறக் கணிப்புகள் இடம்பெறுகின் றன. எனவே, முடிவு என்னவாக இருந்தாலும் அடுத்த தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண் டும்" என்றும் வலியுறுத்தப்பட் டுள்ளது. (இ)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் சிக்கினர்!



கொழும்பு, நவ. 16

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கொட்டி யாகல பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரைப் பொகவந்த லாவைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 43, 52 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல தோட்டங்களில் இன்னும் சம்பளம் வழங்கப்படவில்லை

## தொழிலாளர்கள் கடும் விசனம்

நுவரெலியா, நவ. 16

மக்கள் பெருந்தோட்ட அபி விருத்தி சபை நிர்வாகம் செய்யும் கண்டி மாவட்டம் மற்றும் நுவரெ லியா மாவட்டங்களைச் சேர்ந்த 17 பெருந்தோட்ட தொழிலாளர்க ளுக்கு மாதாந்தச் சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இம்மாதம் 10ஆம் திகதி வழங் கப்பட வேண்டிய சம்பளம் நிர்வா கத்தால் வழங்கப்படவில்லை. இந் நிலையில் அரைச்சம்பளம் மாத்தி ரமே வழங்கப்படும் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது.

மிகவும் நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் சீரற்ற காலநிலை, ஏனைய இயற்கை சவால்களுக்கு முகம் கொடுத்து உழைத்து குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மாத வருமானத்தைத் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்பார்த்திருக் கும்போது இவ்வாறான ஓர் அறி விப்பை நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

"மக்கள் பெருந்தோட்ட அபி விருத்தி சபையானது இதுவரை கால மும் அந்தத் தோட்டங்களில் சேவை புரிந்த தொழிலாளர்களது ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் சேவைகால பணத்தை கூட கடந்த 15 வருடங்களாக வழங் காமல் உள்ளது. ஆனால், பாரிய அள வில் இந்தத் தோட்டங்களிலுள்ள காணிகள் வெளியாருக்கு வழங்கும் நடவடிக்கையும் தடையில்லாமல் தினந்தோறும் நடந்து வருகின்றது. இவ் வாறான ஒரு பின்புலத்தில் உழைத்தவர் களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியத்தை வழங்க முடியாத ஒரு நிர்வாகம் தேவையா?" என்று தோட்டத் தொழிலாளர்கள் கேட்கின்றனர்.

இந்த விடயத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலை வர் துறை மதியுகராஜாவுக்குத் தோட்டத் தொழிலாளர்கள் தெரி வித்ததையடுத்து அவர், ஜனவசம தலைவர் ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி விங் கமாண்டர் புவனக அமர சூரிய கவனத்துக்குக் கொண்டு வந்துள் ளார்.

அதேபோல் அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகேவுக்கும் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

சம்பளம்கூட வழங்க முடியாமல் நிர்வாகம் சென்று கொண்டிருந்தால் அதற்கு மாற்றுவழியைத் தொழிலா ளர்களுக்கு பெற்றுத்தர வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி உள் ளோம் என்று துறை மதியுகராஜா தெரிவித்தார்.

இல்லையென்றால் தோட்டங்க ளைப் பகிர்ந்தளித்து தொழிலாளர் களை சிறு தோட்ட உரிமையாளர் ஆக்குவதன் மூலம் இவ்வாறான அவ லங்களை நிறுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ)

# ரஷ்யா - மேற்குலகம் இடையே எதிர்பாராத போர் மூளக்கூடும்



## பிரித்தானியா எச்சரிக்கை

**லண்டன், நவ. 16**

**ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே எதிர்பாராத வகையில் போர் மூளக்கூடும் என்று பிரித்தா னிய இராணுவ தலைமைத் தளபதி நிக் கார்ட்டர் எச்சரித்துள்ளார்.**

**ரைம்ஸ் வானொலிக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

இதன்போது அவர் மேலும் கூறுகையில்-

“ஒருவருக்கொருவர் மோதுவதையே குணமாகக் கொண்ட அரசியல்வாதிகள் எடுக்கும் முடிவுகளால், எதிரி நாடுகளுடனான பதற்றம் அதிகரிக்கவும் அந்தப் பதற்றம் தவறான கணக்கீடுகளை உருவாக்கவும் நாம் அனுமதிக்கக்கூடாது.

சர்வாதிகாரப் போக்கைக் கொண்ட எதிரி நாடுகளின் தலைவர்கள், தங்கள் வெற்றிக்காக அகதிகள் பிரச்னை, எணணெய் விலையேற்றம், மறைமுகப் போர், இணையம் மூலம் தாக்குதல் போன்ற எதனையும் ஆயுதமாகப் பயன்படுத்துவார்கள்.

பனிப் போர் காலத்தில் அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் என்ற இரு முனைப் போர்ச் சூழல் நிலவியது. அதற்குப் பிறகு, அமெரிக்காவின் ஒரு முனை ஆதிக்கம் நிலவியது. ஆனால், தற்போது பல்வேறு நாடுகளும் தத்தமது நலன்களுக்காக களத்தில் இருப்பதால் குழப்பம் நிறைந்த பல்முனைப் போரை உலகம் எதிர்கொண்டுள்ளது.

அத்தகைய போரை தூதரக ரீதியில் தடுத்து நிறுத்துவதற்கான உத்திகள் போதிய அளவில் இல்லை. இதனால், ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்தால், அது இரு தரப்பினருக்கும் இடையே தவறான புரிதல்களை ஏற்படுத்தி போரை உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்’ - என்றார். (அ)

# முஹம்மர் கடாபியின் புதல்வர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி




திரிப்போலி, நவ. 16

லிபியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அந்நாட்டின் முதலாவது நேரடியான ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட, லிபியாவின் முன்னாள் ஆட்சித் தலைவர் முஹம்மர் அல் கடாபியின் புதல்வர் பதிவு செய்துள்ளார்.

கடந்த காலத்தில் தனது தந்தையின் வாரிசாக இருந்த சைப் அல் - இஸ்லாம் கடாபி 2011 ஆம் ஆண்டு லிபியாவில் ஏற்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான புரட்சியை கொடூரமாக அடக்கும் கொள்கைக்கு ஆதரவளித்தார். இதனால், அவரது புகழுக்கு பங்கம் ஏற்பட்டது.

எதிர்வரும் டிசெம்பர் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள லிபிய ஜனாதிபதித் தேர்தல், சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலாக இருக்காது என மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்தும் அல்லது முடிவுகளை மாற்ற முயற்சிக்கும் நபர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தடைகளை எதிர்நோக்க நேரிடும் என உலக வல்லரசுகளும், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தனது தந்தையின் மரணத்திற்கு பின்னர், சைப் அல் - இஸ்லாம், ஆறு ஆண்டுகள் இராணுவத்தின் பொறுப்பின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட போதிலும் பின்னர் அந்த தீர்ப்பு மாற்றப்பட்டது.

சைப் அல் - இஸ்லாம், போர் குற்றம் சம்பந்தமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தேடப்படும் நபராக இருந்தாலும் படிப்படியாக அவர் மீண்டும் பகிரங்க மேடைக்கு வர தன்னை தயார்படுத்திக்கொண்டார்.



# பாரிஸ் சிறையில் துவாரம் தோண்டி தப்பிக்க முயன்ற இளம் பெண் கைதி

பாரிஸ், நவ. 16

தீவிரவாதச் செயல்களுக்காக விசாரிக்கப்பட்டு வந்த பெண் கைதி ஒருவர் சிறையில் இருந்து தப்பிச்செல்ல எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது.

பாரிஸ் புறநகரப்பகுதிகளில் ஒன்றான பிரெஸ்னஸ் சிறைச்சாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாரிஸ் ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களின் படி -

பெண்கைதி தனது சிறை அறையின் சுவரில் பெரிய துவாரம் ஒன்றைத் தோண்டி அதன் வழியாக வெளியேறி தப்பிச் சென்றுள்ளார்.

கடந்த ஞாயிறு காலை நடைபாதைப்பகுதியில் வைத்து அவரை மடக்கிப் பிடித்து சிறைக் காவலர்கள் மீண்டும் சிறையில் அடைத்துள்ளனர்.

சிறையில் கிடைக்கக் கூடிய சிறு உபகரணங்களைப் பயன்படுத்தி சுவர் கற்களைச் சிறிது சிறிதாக அகற்றித் துவாரம் ஒன்றை உருவாக்கி அதன் வழியாக அவர் சிறையின் கீழ் தளத்துக்கு இறங்கியுள்ளார். சிறையில் பொருத்தப்பட்டுள்ள அசைவுகளைக் கண்காணிக்கும் கருவி அவரது நடமாட்டம் குறித்துக் காவலர்களை எச்சரிக்கை செய்ததாலேயே அவர் மீண்டும் சிக்க நேர்ந்துள்ளது.

தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புடைய காரணத்தால் கைதுசெய்யப்பட்டிருந்த பிரஸ்தாப இளம் பெண், சிரியா நாட்டுக்குச் சென்று திரும்பியவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தற்சமயம் அவரை விசாரணை செய்து வருகின்றனர். இந்தச் சம்பவத்தை அடுத்துச் சிறையில் பெண் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கின்ற சகல அறைகளிலும் விசேட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)


# சர்வதேச விமான கண்காட்சி டுபாயில் கோலாகல ஆரம்பம்

டுபாய், நவ. 16

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச வர்த்தக மற்றும் பாதுகாப்பு விமானங்கள் கண்காட்சி டுபாயில் கோலாகலமாக தொடங்கியது.

கொரோனா வைரஸ் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விமானத்துறையை ஊக்குவிக்கும் விதமாக டுபாயில் உள்ள அல் மக்டோம் விமான நிலையத்தில் இந்த 5 நாள் விமான கண்காட்சி நேற்று முன் தினம் முதல் தொடங்கியுள்ளது. முதல் நாளில் போயிங் ஜெட் மற்றும் போர் விமானங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட சாகச காட்சி பார்வையாளர்களை மெய் சிலிர்க்க வைத்துள்ளது.

டுபாய் சர்வதேச விமான கண்காட்சியில் வணிக ரீதியிலான விமான போக்குவரத்து மற்றும் உலகளாவிய ஆயுத வர்த்தகத்தில் சமீபத்திய கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ரஷ்யா விற்பனைக்காக காட்சிப் படுத்தியுள்ள ‘தி செக்மேட்’ என்ற போர் விமானம் அனைவரின் கவனத்தையும் கவர்ந்துள்ளது.



அமெரிக்காவின் பிரபல எவ் - 35 ரக போர் விமானங் களுக்கு போட்டியாக ‘தி செக்மேட்’ போர் விமானத்தை ரஷ்யா தயாரித்து களத்தில் இறக்கியிருக்கிறது.

போர் விமானங்களில் பொருத்தப்படும் சிறிய ரக ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்களை இஸ்ரேல் இராணுவம் கண்காட்சியில் அறிமுகம் செய்துள்ளது.

மேலும் எரிபொருள் செலவினத்தை குறைக்கும் விதமாக தயாரிக்கப்பட்டுள்ள அதிநவீன விமான எந்திரங்களை போயிங் நிறுவனம் அரங்கில் காட்சிக்கு வைத்துள்ளது. எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள டுபாய் விமான கண்காட்சியில் பல்வேறு நாடுகளின் ஜனாதிபதிகள், பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்துகொள்கின்றனர். முதல் நாளில் பிரேசில் அதிபர் விசேட விருந்தினராக கலந்துக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி போடாதோரை வீடுகளில் முடக்குமாறு ஆஸ்திரியா உத்தரவு!

வியன்னா, நவ. 16

ஆஸ்திரியாவில் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் வீடுகளுக்குள் முடங்கியிருக்க வேண்டும் என அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

நாடு முழுவதும் 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் இந்த முடக்க உத்தரவு பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருள் கொள்வனவு, கொரோனா தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட சில காரணங்களுக்காக மட்டுமே கட்டுப்பாடுகளுடன் அவர்கள் வீட்டை விட்டு வெளியே



வரலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா நோய்த்தொற்று பரவலின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தப் பொதுமுடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் ஆஸ்திரியாவில் கோவிட் -19 தடுப்பூசி போட்டுக்கொள்ளாத சுமார் 20 இலட்சம் பேர் வீடுகளுக்குள் முடங்க நேரிட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை எடுப்பது கடினமாகவே இருந்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இது அவசியம் என ஆஸ்திரிய சான்சலர் அலெக்சாண்டர் ஷாலன்பெர்க் கூறினார்.

ஆஸ்திரியாவின் மக்கள் தொகையில் சுமார் 65 வீதம் பேருக்கு இதுவரை முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பாவில் மிகக் குறைந்த தடுப்பூசி வீதமாக இது பதிவாகியுள்ளது.

இந்நிலையில் இங்கு மீண்டும் தொற்று நோய் பரவல் அதிகரித்து வருகிறது. கடந்த 7 நாட்களில் 100,000 பேருக்கு 800 பேர் என்ற அடிப்படையில் தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றனர். இது ஐரோப்பாவில் மிக உயர்ந்த தொற்று நோய் பரிமாற்ற வீதமாகும்.

இதனைக் கருத்தில் கொண்டே தடுப்பூசி போடாதவர்களை வீடுகளில் முடக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

(அ)

ஈழநாடு



# மஹேலவுக்கு உயர் கௌரவம் சர்வதேச கிரிக்கெட் அளித்தது

துபாய்,நவ.16

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) புகழ்பூத்த வீரர்கள் பட்டியலில் இலங்கையின் முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன இணைக்கப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி. ஆடவர் இருபது - 20 உலகக் கிண்ண இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவருக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டது.

மஹேல ஜெயவர்த்தனவுடன் தென் ஆபிரிக்காவின் முன்னாள் அணித் தலைவர் ஷேன் பொலாக், இங்கிலாந்து மகளிர் டெஸ்ட் அணி வீராங்கனை ஜெனெட் ப்ரிட்டின் ஆகியோரும் ஐ.சி.சி.யின் புகழ்பூத்த வீரர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் மேற்கிந்திவுகளின் ஜாம்பவான் க்ளைவ் லொய்ட்டால் உத்தியோகபூர்வமாக சேர்க்கப்பட்டனர்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அபரிமிதமான ஆற்றல்களை வெளிப்படுத்திய வீரர்களை கௌரவிக்கும் வகையில் ஐ. சி. சி. புகழ்பூத்த வீரர்கள் பட்டியலை 2009ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இந்தப் பட்டியலில் இன்றுவரை 106 வீரர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள மூன்றாவது இலங்கை வீரர் மஹேல ஆவார். முன்னதாக முத்தையா முரளிதரன், குமார் சங்கக்கார ஆகியோர் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# 50 ஓவர் தலைமையையும் துறக்கிறார் விராட் கோலி?

புதுடில்லி,நவ.16

இந்திய அணித் விராட் கோலி விரைவில் ஒருநாள் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்தும் விரைவில் விலகிவிடுவார் என்று முன்னாள் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி சூசகமாக தெரிவித்துள்ளார்.

அண்மையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு ரவி சாஸ்திரி அளித்த நேர்காணலில், "விராட் கோலி தலைமையில் கடந்த 5 ஆண்டுகளாக இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் முதல் அணியாக இருந்தது. ஆதலால், கோலி தொடர்ந்து எதிர்காலத்தில் தனது துடுப்பாட்டத்திலும், டெஸ்ட் போட்டி தலைமையிலும் மட்டும் கவனம் செலுத்தக் கூடும்.

இவ்வாறு அவர் முடிவெடுத்தால் விரைவில் ஒருநாள் அணியின் தலைமை பதவியிலிருந்து விலகலாம். இது உடனடியாக நடக்குமா என எனக்குத் தெரியாது. எதிர்காலத்தில்கூட நடக்கலாம். கோலி தனது மனது மற்றும் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவை எடுக்கலாம்.

கோலி அணித் தலைவர் பதவியிலிருந்து விலகும் முதல் வீரர் அல்ல. இதற்கு முன் பல ஜாம்பவான்கள் தலைமைப் பதவியிலிருந்து விலகி துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தப் போயிருக்கிறார்கள். ஆதலால், ஒருநாள் தலைமை பதவியிலிருந்து கோலி விலகுவதில் சர்ச்சையில்லை" - என்று கூறினார். (ஐ)

## இருபது - 20 உலகக் கிண்ணம்:

# சிறந்த வீரர்களின் அணியில் அசலங்க, ஹசரங்கவுக்கு இடம்!

துபாய், நவ. 16

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் சிறந்த வீரர்களை கொண்ட ஓர் அணியை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இந்த அணியில் இலங்கையின் வனிந்து ஹசரங்க, சரித் அசலங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேசமயம், இந்த அணியில் எந்த இந்திய வீரருக்கும் இடம் வழங்கப்படவில்லை. இதேநேரம் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம், ஐ. சி. சி. அணியினதும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வெற்றிக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலியா, இரண்டாவது இடம்பிடித்த நியூசிலாந்து அணிகளின் வீரர்கள் எனப் 12 வீரர்கள் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளதுடன், விக்கெட் காப்பாளராக இங்கிலாந்தின் ஜோஸ் பட்லர் உள்ளார்.

அணி விவரம் (துடுப்பாட்ட ஒழுங்குவரிசையில்)

டேவிட் வோர்னர் (அவுஸ்திரேலியா - 289 ஓட்டங்கள்), ஜோஸ் பட்லர் (இங்கிலாந்து - 269 ஓட்டங்கள் - விக்கெட் காப்பாளர்), பாபர் அஸாம் (பாகிஸ்தான் - அணித் தலைவர் - 303 ஓட்டங்கள்), சரித் அசலங்க (இலங்கை - 231 ஓட்டங்கள்), அய்டன் மார்க்ரம் (தென்னாபிரிக்கா - 162 ஓட்டங்கள்), மொயின் அலி ( இங்கிலாந்து - 92 ஓட்டங்கள் - 11 விக்கெட்கள்), வனிந்து ஹசரங்க (இலங்கை - 16 விக்கெட்கள்), அடம் சம்பா (அவுஸ்திரேலியா - 13 விக்கெட்கள்), ஜோஸ் ஹசல்வூட் (அவுஸ்திரேலியா - 11 விக்கெட்கள்), ட்ரெண்ட் போல்ட் (நியூசிலாந்து - 13 விக்கெட்கள், அன்ரிச் நோர்ட்ஜே (தென்னாபிரிக்கா - 9 விக்கெட்கள்), ஷஹீன் அப்ரிடி (பாகிஸ்தான் - 7 விக்கெட்கள்). (ஐ)





# டபிள்யூ. ரி. ஏ. ரென்னிஸ்; அரையிறுதியில் படோசா



மெக்சிக்கோசிற்றி, நவ. 16

டபிள்யூ. ரி. ஏயின் இறுதி தொடரின் அரையிறுதிக்கு ஸ்பெயினின் படோசா முன்னேறினார்.

டபிள்யூ. ரி. ஏயின் இறுதி தொடரில் உலகின் முதல் நிலையிலிருக்கும் 8 வீராங்கனைகள் இரு பிரிவுகளாக மோதுகின்றனர். இரு பிரிவுகளாக நடக்கும் இந்தத் தொடரில் குழு 1 போட்டியில் ஸ்பெயினின் பவ்லா படோசா, கிரீஸின் மரிய சக்காரி மோதினர்.

2 மணித்தியாலமமும் 4 நிமிடங்களும் நீடித்த இந்தப் போட்டியில் முதல் செற்றை 7 -6 என்ற கணக்கிலும் இரண்டாவது செற்றை 6 -4 என்ற கணக்கிலும் படோசா கைப்பற்றினார்.

முதல் போட்டியில் பெலாசரஸின் சபலென்காவை வீழ்த்திய படோசா தொடர்ச்சியாக இரண்டாவது வெற்றியை பதிவு செய்து அரையிறுதி போட்டிக்கு முன்னேறினார். (ஐ)



# அவுஸ்திரேலிய ஓப்பன்; ரோஜர் பெடரர் விலகல்!

சூரிச், நவ. 16

காயத்திலிருந்து மீண்டு வரும் ரோஜர் பெடரர் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸில் விளையாட வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

20 முறை கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற அவர் இன்னும் சிறிது காலத்தில் ரென்னிஸ் விளையாட்டுக்கு திரும்புவதில் உறுதியாக இருக்கிறார் என்று அவரின் பயிற்றுவிப்பாளர் இவான் லுபிசிக் தெரிவித்துள்ளார்.

40 வயதான சுவிற்சர்லாந்து நாட்டவரான பெடரர் கடந்த ஜூலையில் நடந்த விம்பிள்டன் தொடரில் காலிறுதியில் தோல்வியடைந்தார். முழங்கால் சத்திர சிகிச்சையை தொடர்ந்து அவர் எந்தத் தொடரிலும் விளையாடவில்லை.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரிலும் அவர் விளையாடுவது சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# இந்திய மீனவர்கள் 23 பேரும் நிபந்தனையுடன் விடுதலை!

## சொத்துக்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், நவ.16

**அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரும் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் நேற்று நிபந் தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர்.**

குறித்த மீனவர்கள் தொடர் பிலான வழக்கு விசாரணை நேற்று பருத்தித்துறை நீதிமன் றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது - மீனவர்கள் பத்து ஆண்டு களுக்குள் இலங்கை கடல் எல் லைக்குள் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற் படுத்தப்பட்டால் சிறைத்தண் டனையை அனுபவிக்க நேரி டும் என்று உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, மீனவர்கள் பயணித்த படகு கள் இரண்டு, இழுமடி உட் பட்ட உபகரணங்களும் பறி முதல் செய்யப்படுவதாக நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட் டது.

மீனவர்களை தாயகம் அழைத்துச் செல்வதற்கான நட வடிக்கையை இந்தியத் துணைத் தூதரகம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)



# பட்டிப்பளை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட சுமணரத்ன தேரர்!

மட்டக்களப்பு, நவ. 16

மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மட்டக் களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலா ளரின் அறையை முற்றுகையிட் டுப் போராட்டத்தில் ஈடுபட் டார்.

இதன்காரணமாக நேற்று திங்கட்கிழமை பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் நட வடிக்கைகள் முற்றாக முடங்கின.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிழியாமடு பகுதியில் வனஇலாகாவுக்குரிய காணியை விகாரை அமைப்பதற்கு கோரி னார் எனவும் அதனை வழங்கு வதற்கு தனக்கு அதிகாரம் இல்லையென பிரதேச செயலா ளர் தெரிவித்ததை தொடர்ந்தே இந்த போராட்டத்தை பிக்கு முன்னெடுத்தார்.

பிரதேச செயலாளரையும் ஊழியர்களையும் அச்சுறுத்தும் வகையில் அவர் போராட்டம் நடத்தினார் என்றும், பொலி ஸார் அவரை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

# மாவீரர் நினைவுநாளை மாற்றியமைப்பது துயிலுமில்லங்களை தகர்த்தமைக்கு சமன்

## முடிவை பரிசீலிக்குமாறு ஆயர்களிடம் ஐங்கரநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 16

இலங்கை இராணுவம் யுத் தம் முடிந்த கையோடு மாவீரர் துயிலும் இல்லங்களை இருந்த சுவடே தெரியாமல் அழித் தொழித்தது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை, அதனூடாகப் போராட்டத்தின் நியாயப்பாடு களை மக்கள் மனங்களில் பதிய வைக்கும் வரலாற்றுக் கடத்திக ளாக இவை அமைந்துவிடும் என்பதே இதற்கான காரண மாகும். இதேபோன்றே, மாவீரர் நினைவுநாளை மாற்றியமைப் பதும், எல்லோருக்குமான பொது வான நினைவு நாளாகக் கடைப் பிடிப்பதும் மக்கள் மனங்களில் எஞ்சியுள்ள நினைவுகளையும் துடைத்தழிக்கும் வரலாற்றுத் திரிபுபடுத்திகளாக அமைந்து விடும். அந்த வகையில், மாவீரர் நாளை ஆயர் மன்றம் மாற்றிய மைப்பது படையினர் மாவீரர் துயிலுமில்லங்களைத் தகர்த்த மைக்கு ஒப்பானதாகிவிடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் போரால் உயிரிழந்தவர் களுக்கான நினைவுநாளாக நவம்பர், 3ஆவது சனிக்கிழ மையைக் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுத்தது. இது தொடர்பில் ஐங்கரநேசன் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் மக்கள் போராடி மடிந்த வீரமறவர் களின் நினைவாக நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாளை யும், போரால் இறந்த பொது மக்களின் நினைவாக மே 18 இல் முள்ளிவாய்க்கால் தினத் தையும் படையினரின் கெடு பிடிகளுக்கு மத்தியிலும் கடைப்பிடித்து வரும் நிலை யில் ஆயர் மன்றத்திடமிருந்து இக்கோரிக்கை எழுந்துள்ளது.

கூட்டுப் பிரார்த்தனை களைப் போன்று கூட்டு அஞ் சலிகளுக்கும் வலிமை மிக அதி கம். இதனாலேயே வெவ்வேறு காலப்பகுதிகளில் இறந்தாலும் போராடி மடிந்தவர்களுக்கான கூட்டு நினைவுநாளாக நவம்பர் 27உம், போரில் மடிந்த பொது மக்களுக்கான கூட்டு நினைவு நாளாக மே 18உம் கடைப்பிடிக் கப்பட்டு வருகிறது. கூட்டு நினைவுநாளுக்கான இத்திகதி கள் எழுந்தமானமான தெரிவு கள் அல்ல. ஒவ்வொரு திகதியும் தன்னகத்தே தமிழ்த்தேசிய விடு தலைப் போராட்டத்தின் முக்கியமான வரலாறுகளைப் பொதிந்து வைத்திருக்கிறது. இத்தினங்கள் தமிழ்த்தேசிய இனத்தின் வலிமிகுந்த போராட்ட வரலாற்றைச் சந்ததி கள் தோறும் கடத்தும் வரலாற் றுக் கடத்திகளாகும்.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடு களைச் சர்வதேசங்களுக்கு எடுத்துச்சென்ற வெள்ளைப்பட் போராளிகளாகக் கத்தோலிக்க ஆயர்கள் மற்றும் குருவான வர்கள் பலர் இருந்துள்ளனர். இந்நிலையில், அவர்கள் சார்ந்த அமைப்பிலிருந்து கெடுபிடி களைக் காரணங்காட்டி இக்கோரிக்கை எழுந்திருப்பது தமிழ் மக்களிடையே பெரும் கவலையைத் தோற்றுவித்துள் ளது. எனவே, ஆயர் மன்றம் தங்களது இந்த முடிவை மீள்பரி சீலனை செய்ய வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# தந்தையை இரும்புக்கம்பியால் தாக்கிக் கொலை செய்த மகன்!

கொழும்பு, நவ. 16

மனநலம் பாதிக்கப்பட்ட நபர், தனது தந்தையை இரும் புக் கம்பியால் தாக்கிப் படு கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல், பனாகமுவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள் ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் பனாகமுவ, கோபாலகெதர பிரதேசத்தை சேர்ந்த 62 வயது நபரே மரண மடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

சம்பவத்துடன் தொடர்பு டைய 32 வயது நபரைக் கைது செய்துள்ள போகஸ்வெல பொலிஸார், மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ள னர்.

# மன்னாரில் நீர் தாங்கி குண்டு வைத்து தகர்ப்பு

மன்னார், நவ. 16

மன்னார் உப்புக்குளம் கோந்தைப்பிட்டி கிராமத்தில் சுமார் 45 வருடங்களுக்கு முன் னர் அமைக்கப்பட்டு கைவிடப்பட்ட பெரிய நீர் தாங்கி நேற்று இராணுவத்தின ரால் குண்டு வைத்து தகர்க்கப் பட்டது.

துறைமுகங்கள் அதிகார சபையால் அமைக்கப்பட்ட இந்த நீர் தாங்கியிலிருந்து தண்ணீர் விநியோகம் இடம் பெறவில்லை. முழுமையாக பழுதடைந்த இந்த நீர் தாங்கி பகுதியில் மக்கள் குடியேற்றம் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில், பழுத டைந்த நீர் தாங்கி அச்சுறுத்த



லாக இருப்பதாகவும் அதனை அகற்றித் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த நிலையில் நேற்று அந்த நீர் தாங்கியை இராணுவத்தினர் குண்டு வைத்து தகர்த்தனர்.

இதன்போது, அந்த நீர் தாங்கியில் வசித்த அரிய இன மான கூகை ஆந்தை ஒன்று காயங்களுடன் மீட்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது

# சிங்கள குடியேற்றத்துக்கு எதிராக வவுனியாவில் நேற்று போராட்டம்

வவுனியா, நவ. 16

வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்ற எடுக் கும் முயற்சிக்கெதிராக வவுனியா வடக்கு பிரதேச செயலகத் துக்கு முன்பாக மாபெரும் போராட்டம் இடம்பெற்றது.

திட்டமிட்ட குடியேற்றத் துக்கு எதிரான மக்கள் போராட் டக்குழு மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் நேற் றுக் காலை குறித்த ஆர்ப்பாட் டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள்,

“எங்கள் நிலம் எமக்கு வேண் டும்”, “தொல்பொருட் திணைக் களமே வரலாற்றை திரிபுபடுத் தாதே”, “அதிகார இனவெறி யைத் தமிழர்கள்மீது காட்டாதே”, “சிங்களக்குடியேற்றத்தை நிறுத்து” போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

இதேவேளை, ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட் டது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ ரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ





நோகராதலிங்கம், சி.சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்த ராஜா, பிரதேச சபை தலை வர்களான ச.தணிகாசலம், யோகராசா, நகரசபைத் தலை வர் இ.கௌதமன், புதிய ஜன நாயக மாக்சிச லெனினிச கட்சி யின் நி.பிரதீபன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்க ளான ஜி.ரி.லிங்கநாதன், செ. மயூரன், ம.தியாகராஜா உட்ப ட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## இந்திய...

பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவுடன் அரசாங்கம் சிறந்த நட்புறவை கொண்டிருக்கவில்லை என எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் கூற்றை முழுமையாக நிராகரிகின்றேன். இந்தியாவுடனான சிறந்த நட்புறவே பெருந்தொகை தடுப்பூசிகள் மற்றும் உதவிகளையும் பெற்றுக் கொள்ள இலங்கைக்கு உறுதுணையாக அமைந்தது.

அதேபோன்று ஜப்பான், ரஷ்யா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்த இக்கட்டான காலங்களில் கொரோனா தடுப்பூசிகளையும் பாரிய ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

எதிர்க்கட்சியினர் சிறுசிறு பிரச்னைகளை பெரிதாக தூக்கிப் பிடித்துக் கொண்டு செயல்பட்டால் அது மேலும் மேலும் அவர்களின் வீழ்ச்சிக்கே வழி வகுக்கும். நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலையிலும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம் வெளிநாட்டுக் கடனை எந்த குறைவுமின்றி தொடர்ச்சியாக செலுத்தியுள்ளது. கொரோனாவை காரணம் காட்டி அதனை வழங்குவதில் அரசாங்கம் தவறவில்லை.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் கிராமியப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான அனைத்து திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் மத்திய வங்கி விவகாரத்தில் பெரும் தவறிழைத்து விட்டது. எமது அரசாங்கம் அவ்வாறு எத்தகைய தவறுகளையும் மேற்கொள்ள வில்லை. கடந்த அரசாங்க காலத்தில் பேப்பர்ச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனம் மோசடி மூலம் பெற்ற நிதியை மீள திறைசேரிக்கு பெற்றுக் கொள்வதற்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

எனினும் மத்திய வங்கியில் பாரிய மோசடி இடம்பெற்ற போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தினரான தற்போதைய எதிர்க்கட்சியினர் எமது நிதி கொள்கை தொடர்பில் விமர்சித்து வருவது விந்தையாகவுள்ளது.

இம்முறை வரவு செலவுத் திட்டம் மிகவும் சிறந்தது. சிறு சிறு குறைபாடுகளையும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் சிறுசிறு செய்திகளையும் தூக்கிப் பிடித்துக்கொண்டு எதிர்க்கட்சியினர் அரசியல் செய்யப் பார்க்கின்றனர். அவர்கள் எமது அரசியல் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளும் விமர்சனங்களை எந்த வகையிலும் ஏற்க முடியாது.

நாட்டில் குறைந்த வருமானம் பெறும் மக்களே பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று கூறினார்.

## அருட்தந்தையிடம்...

நேற்று விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றனர். அத்துடன், அவர் இன்று செவ்வாய்க்கிழமையும் விசாரணைக்கு சமுகமளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தள சந்திப்பு ஒன்றில் அரச புலனாய்வு திணைக்கள பணிப்பாளர் சுரேஷ் சாலே குறித்து அருட்தந்தை சிறில் காமினியால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பிலேயே அவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டார்.

காலை 9.45 மணியளவில் குற்றவியல் பொலிஸார் முன்பு சட்டத்தரணிகள் மூவருடன் முன்னிலையானார் அருட்தந்தை அவர் குற்றவியல் பொலிஸ் திணைக்களத்துக்கு செல்வதற்கு முன்பு 50இற்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் அவருக்கு ஆதரவாக கூடியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொதுக்...

மேலும், இந்தக் காலப்பகுதியில் சமய நிகழ்வு, திருமண நிகழ்வு, மரணச் சடங்கு என்பவற்றுக்கு வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன்படி, திருமணம், மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுகளில் அதிகபட்சம் 150 பேரே பங்கேற்கமுடியும். எனினும், மண்டபத்தின் அல்லது நிழ்விடத்தின் கொள்ளவில் 3இல் ஒரு பங்கினர் அல்லது 100 பேர் மட்டுமே ஒரேநேரத்தில் ஒன்றுகூடலாம்.

வீடுகளில் வெளியார் 10 பேருக்கு மேல் ஒன்றுகூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீட்டை விட்டு தேவையின்றி வெளியே செல்வதைத் தவிர்க்கவும். கூடியளவில், மெய்நிகர் சந்திப்புகளை நிகழ்த்தவும்.

உள்ளரங்குகளில் இடம்பெறும் நிகழ்வுகளில் கொள்ளவில் மூன்றில் ஒரு பங்கினர் கூடலாம். எனினும், 100 பேருக்கு மேல் பங்கேற்க முடியாது. வெளிப்புற கூட்டங்களுக்கு அனுமதி இல்லை.

வர்த்தக மையங்கள் சுகாதார அதிகாரிகளின் கடுமையான மேற்பார்வையின் கீழ் மொத்த வியாபாரத்திற்காக திறக்க அனுமதிக்கப்படும். உணவு கையாளும் நிலையங்களில் அதன் கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கினருக்கே அனுமதி. எனினும், 75 பேருக்கு மேற்பட்டோர் ஒரே நேரத்தில் கூடக்கூடாது.

பலசரங்கு கடைகள், மருந்தகங்கள், பல்பொருள் அங்காடிகள் அதன் கொள்ளளவு திறனில் ஒரேநேரத்தில் மூன்றில் ஒரு பங்கினருக்கே அனுமதி.

வங்கிகள், நிதி நிறுவனங்களில் ஒரே நேரத்தில் 15 பேரே அனுமதிக்கப்படலாம். மீதமுள்ள வாடிக்கையாளர்கள் வெளியே ஒரு மீற்றர் இடைவெளியை பேணி காத்திருக்க முடியும்.

சலூன்கள், தையலகங்களில் முன் கூட்டிய பதிவுகள் மூலம் வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் குறித்து கல்வி அமைச்சு தீர்மானிக்கும். பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் முன்பள்ளிகள் திறக்க அனுமதிக்கப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்கள் குறித்து மானிய ஆணைக் குழு தீர்மானிக்கும்.

நீதிமன்றங்கள் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட வேண்டும்.

திரையரங்குகள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களில் அவற்றின் மொத்த கொள்ளளவு திறனில் 50 வீதமானவர்களையே ஒரே நேரத்தில் அனுமதிக்கலாம். விளையாட்டு நிகழ்வுகளில் பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை.

இறுதிச் சடங்குகளில் ஒரே நேரத்தில் 20இற்கும் மேற்படாதவர்கள் பங்கேற்க முடியும். அத்துடன், ஒருவர் இறந்து 24 மணி நேரத்திற்குள் இறுதிச் சடங்குகள் செய்யப்பட வேண்டும். (ஐ)

## சமூக...

அத்துடன், இளைஞர் ஒருவரும் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள்களில் அரசடி பகுதிக்கு சென்ற 25இற்கும் மேற்பட்ட கும்பல் இரு வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்த பெறுமதியான பொருட்களை அடித்து நொருக்கியது. அத்துடன், வீடு ஒன்றின்மீது பெற்றோல் குண்டு தாக்குதலையும் நடத்தியது.

பின்னர், பழம் வீதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களை அச்சுறுத்தியதுடன், கதிரைகள், மேசைகள், கண்ணாடிகளையும் அடித்து உடைத்தது.

இதன்போது இளைஞர் ஒருவரையும் தாக்கிக் காயப்படுத்தியதுடன் வாள் வெட்டிலும் ஈடுபட்டது. இதில், உதய சூரியன் தர்சன் என்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சமூகவிரோத கும்பலை இனங்கண்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 250,000 பேருக்கு அடுத்த வருடம் வெளிநாட்டு வேலை கிடைக்கும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தகவல்

கொழும்பு. நவ. 16

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக அடுத்த வருடத்தில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பேரை அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்ததுடன் இந்த வருடத்தில் இதுவரை காலமும் 83 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ள நிலையில் இந்த வருட இறுதிக்குள் அது ஒரு இலட்சமாக அதிகரிக்கக்கப்படும் என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற வரவு -செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தொடர்ந்தும் பேசுகையில்,

கடந்த சில வருடங்களாக நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு செல்வோர் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி வருமானம் குறைந்துள்ளது. டொலர் பிரச்னைக்கு அதுவும் ஒரு காரணம். அதனை மீண்டும் அதிகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிநாட்டு அந்நிய செலாவணி எமக்குக் கிடைக்கும் போதுதான் நாட்டில் நிலவும் டொலர் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும்.

அதேபோன்று பால்மா, உடைகள் உள்ளிட்ட இலங்கையில் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியுமானால் எமக்கு டொலர் பிரச்னையை சமாளிக்க முடியும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பை பொறுத்தவரையில் இலங்கைக்கு கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. அந்த நாடுகளுக்கு நாம் பயிற்சிபெற்றவர்களை அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளோம். இதற்கமைய வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக அடுத்த வருடத்தில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பேரை அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த வருடத்தில் இதுவரை காலமும் 83 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ள நிலையில் இந்த வருட இறுதிக்குள் அது ஒரு இலட்சமாக அதிகரிக்கக்கப்படும்.

எரிபொருளின் விலை அதிகரித்து காணப்படும் நிலையில் அதற்கான தேவையை குறைத்துக் கொள்வதற்கு நாட்டில் மீள் புத்தாக்க மின்சக்தி உற்பத்தி துறை பலப்படுத்தப்பட வேண்டும். அதற்கு இந்தியா போன்ற நாடுகளின் உதவிகள் கிடைக்கவுள்ள நிலையில் அரசாங்கம் அது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளது-என்றார்.

# வவுனியா இளைஞர் கொலை சந்தேகநபர் நேற்று கைதானார்!

வவுனியா, நவ. 16

வவுனியாவில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்பு டையவர் என்று சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா - போகஸ்வெவ பொலிஸ் பிரிவில் படுகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை வெட்டுக்காயங்களுடன் வீதியிலிருந்து மீட்கப்பட்ட ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். அதே இடத்தை சேர்ந்த 26 வயது நபரே உயிரிழந்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார், அதேபகுதியை சேர்ந்த 30 வயது நபர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று கைது செய்தனர். (ஐ)

## கிளிநொச்சியில்...

ஊற்றுப்புலத்தை சேர்ந்த திருவாசகம் மதுசாலினி (வயது 17) என்ற மாணவியே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

ஊற்றுப்புலத்தை சேர்ந்த மாணவியர் மூவர் உயர்தரப் பிரிவில் கல்வி கற்பதற்காக கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அனுமதி பெறுவதற்காக நேற்று அங்கு சென்றனர். பாடசாலையின் எதிர்த் திசையிலிருந்து பாடசாலைக்கு செல்வதற்காக அவர்கள் பாதசாரி கடவையை கடந்தனர்.

அவர்கள் வீதியை கடக்கும்வரை பட்டா ரக வாகனம் ஒன்றும், இலங்கை மின்சார சபையின் ஒப்பந்தகாரர் ஒருவரின் ஹன்ரர் ரக வாகனமும் காத்திருந்தன. இந்த நிலையில், அதிவேகமாக வந்த இ. போ. ச. பேருந்து ஹன்ரரை மோத அது பட்டா ரக வாகனத்தை மோதியது. அந்த வாகனம் வீதியை கடந்து கொண்டிருந்த மாணவிகளை மோதவே மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொரு மாணவி படுகாயமடைந்தார்.

உயிரிழந்த மாணவியின் தந்தை நாளாந்தம் சைக்கிளில் விறகு ஏற்றிச் சென்றே தனது மகளை கற்பித்து வந்தார். மிகவும் வறிய நிலையிலும் சிறப்பாக கல்வி கற்றுவந்த மாணவி உயர் தரக் கல்விக்காக பாடசாலைக்கு சென்ற முதல் நாளிலேயே விபத்தில் உயிரிழந்தமை கிளிநொச்சி முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## எரிபொருள்...

முதல் யாழ்ப்பாணத்தில் எரிபொருளை கொள்வனவு செய்தவற்காக பொதுமக்கள் முண்டியடித்தமையை நேற்று காண முடிந்தது.

வாகன தாங்கிகளில் எரிபொருளை நிரப்பியமைக்கு மேலதிகமாக போத்தல்களிலும் எரிபொருளை மக்கள் கொள்வனவு செய்தமையை அவதானிக்க முடிந்தது. யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி நாடு முழுவதும் இதே நிலைமையை காணப்பட்டதாக பல இடங்களிலும் இருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்றைய தினம் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டும் இருந்தமையை காண முடிந்தது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

தின் பணிகள் 50 நாள்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படப் போகின்றது என்ற அனுமானத்தில் பொதுமக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

"சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையம் நாட்டின் 14சதவீத பெற்றோல் மற்றும் 29 சதவீத டீசல் தேவையை மட்டுமே நிறைவு செய்கிறது. இதனால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பு உள்ளது. எரிபொருள் விநியோகமும் சீராக இடம்பெறுகிறது" - என்றும் அவர் கூறினார். (ஐ-3)

ஈழநாடு
Eelanadu

# கொரோனாவுக்கு மாத்திரை; அனுமதியளித்தது அரசாங்கம்!

கொழும்பு, நவ. 16

**கோவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மோல்னுபிராவிர் (Molnupiravir) என்ற மாத்திரையின் பயன்பாட்டுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. தடுப்பூசிக்கு பதிலாக தொற்றாளர் இந்த மாத்திரையை பயன்படுத்த முடியும்.**

மோல்னுபிராவிர் தடுப்பு மருந்து பயன்பாடு குறித்து ஆய்வு செய்த பின்னர் கோவிட்-19 தொழில்நுட்பக் இதற்கு ஒப்புதல் அளித்தது.

இதனையடுத்தே, வாய்வழி வைரஸ் தடுப்பு மாத்திரையை கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சைக்காக இலங்கையில் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

Merck, Sharp and Dohme (MSD) மற்றும் Ridgeback Biotherapeutics ஆகிய அமெரிக்க மருந்து நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட மோல்னுபிராவிர் கோவிட் நோய்க்கான முதல் வாய்வழி தடுப்பு மருந்தாகும்.

காய்ச்சலுக்கு சிகிச்சையளிப்பதற்காக முதலில் உருவாக்கப்பட்ட இந்த மாத்திரை, கொரோனாவால் பாதிக்கப்படுவோர் மருத்துவமனையில் சேர்க்கப்படும் அல்லது உயிரிழக்கும் அபாயத்தை பாதியாக குறைத்ததுள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வலி. தெற்கு பிரதேச சபையின் பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், நவ. 16

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டது.

வலி. தெற்கு பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று அதன் தவிசாளர் கருணாகரன் தர்சன் தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

30 உறுப்பினர்கள் கொண்ட சபையில் நேற்றைய தினம் 25 உறுப்பினர்கள் பங்கேற்றனர். இவர்கள் அனைவரும், தவிசாளரால் முன்வைக்கப்பட்ட 19. 447 கோடி ரூபாய் பெறுமதியான பாதீட்டுக்கு ஆதரவை வெளிப்படுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 11 உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

நேற்றைய அமர்வை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 4 உறுப்பினர்களும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் பங்கேற்கவில்லை. (ஐ)

## எமது தேசத்தையும் மக்களையும் இனத்தின் பலமே பாதுகாக்கும்

### வவுனியாவில் மாவை சேனாதிராசா

வவுனியா, நவ. 16

இனப் பலம்தான் எமது தேசத்தையும் மக்களையும் பாதுகாத்து ஆட்சி உரிமையை வழங்குவதற்கான அத்திவாரமாக இருக்கக்கூடும் என்று, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

சிங்கள குடியேற்றங்களுக்கு எதிராக, வவுனியா வடக்கில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்றபோதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

மேலும், தமிழர்களின் பாரம்பரிய தேசம் கடந்த 70 ஆண்டுகளாகவும், இப்போதைய ஆட்சியினாலும், சிங்கள குடியேற்றங்களாலும், ஆக்கிரமிப்புக்களாலும் மாற்றியமைக்கப்படுகிறது.

தமிழர்களின் பெரும்பான்மை இனப் பிரதிநிதித்துவம், இனப் பரம்பல் சீர்குலைக்கப்பட்டு, அவர்களின் இன அடையாளம் அழிக்கப்படும் நடவடிக்கை இப்போதைய காலப் பகுதியில் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் தேசம் , கலாசாரம், மதம் எல்லாமே பௌத்த - சிங்கள மயமாக்கப்பட்டு, தமிழ் மக்களை அழிக்கின்ற - தமிழ் தேசத்தை அழித்து விடுகின்ற நடவடிக்கையை இந்த ஆட்சியும் செய்து வருகிறது.

அதனைவிட, தமிழ் பிரதேசங்களோடு அயலில் இருக்கின்ற சிங்கள கிராமங்களை இணைப்பதன் மூலம், தமிழர்களின் பெரும்பான்மையை அழித்து, சீர்குலைத்து "தமிழ் இனம்" என்கிற அந்தப் பதத்தை அல்லது இனப் பரம்பலையே இல்லாமல் செய்கிற நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

"கோட்டபாய ஆட்சியில், தமிழர்களுடைய தேசம் சிங்கள மயமாக்கப்பட்டு, பௌத்த தேசமாக்கப்படுவதற்கு எதிராக நாம் தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டியதுடன், தமிழின அடையாளங்களையும் பாதுகாக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம் - என்றார். (ஐ)

## இந்திய வீசா வழங்கல் ஆரம்பம்

கொழும்பு. நவ. 16

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு பயணிப்போருக் கான சுற்றுலா வீசா வழங்கும் நடவடிக்கை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக கடந்த சில மாதங் களாக இந்தியாவுக்கான சுற்றுலா வீசா வழங்கும் நடவடிக் கைகள் நிறுத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தனின் தலைமைத்துவம் தமிழர்களுக்கு தேவையில்லை!

### காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்

வவுனியா, நவ. 16

"சம்பந்தனின் தலைமை தமிழர்களுக்கு தேவையில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் அவர்கள் தொடர்ச்சியாக நடத்தி வரும் போராட்டம் 1731ஆவது நாளாக நேற்றும் முன்னெடுத்தபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும், இன்று தமிழர்களுக்கு ஆபத்தான நாள். ஏனென்றால், சுமந்திரன் அமெரிக்காவில் இருக்கிறார். அமெரிக்காவிலிருந்து சுமந்திரன், தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தை நிறுத்த முடிந்தால், 95 வீதத்துக்கும் மேற்பட்ட கட்சி உறுப்பினர்களால் கூட்டத்தை நடத்துவதற்கான உரிமைக்கு போராட முடியாதெனின், தமிழர்களின் உரிமைக்காக இந்தக் கட்சி எவ்வாறு போராட முடியும் என்பதை இது எடுத்து காட்டுகிறது.

ஜீ. எல். பீரிஸ் மற்றும் ராஜபக்ஷக்களை சந்தித்த பின்னர், சுமந்திரன் மூலம் இலங்கையின் செய்தியை வெளிப்படுத்தவே இந்த அமெரிக்க சந்திப்பு. அவரை கட்சியிலிருந்து நீக்க வேண்டும். கதிர்காமர், ஓர் அமைச்சராக, தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை சட்டவிரோதமாக்க உலகம் முழுவதும் பயணம் செய்தார். இப்போது கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளராக சுமந்திரன், கதிர்காமர் போல உலகம் முழுவதும் சுற்றி வருகிறார்.

சம்பந்தனுக்கு கொழும்பில் அரசாங்க கார் மற்றும் பங்களா தேவை. சம்பந்தனை ஓய்வு பெறச் சொல்லவும் இன்று நல்ல நாள். அவரின் தலைமை தமிழர்களுக்கு தேவையில்லை - என்றனர். (ஐ)

## 20இற்கு காத்த மௌனம் போன்று யுகதனவிக்கு காக்கமாட்டோம்!

### அமைச்சர் உதய கம்மன்பில எச்சரிக்கை

கொழும்பு, நவ. 16

மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் மீறப்பட்டு வருகின்றமையால்தான் தொடர்ச்சியாக அரசாங்கத்தில் இருந்துகொண்டு எதிர்கட்சியின் பணியை செய்துகொண்டுள்ளோம். 20ஆம் திருத்தத்திற்கு அமைச்சரவையில் மௌனம் காத்தமை போன்று இப்போதும் மௌனமாக இருக்க முடியாது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசின் பங்காளி கட்சிகளுக்கு இடையே நீடிக்கும் முரண்பாடுகள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு பதில் கூறினார்.

இதன்போது, அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டுக்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம், மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்போம் எனறே எமது தேர்தல் மேடைகளில் தெரிவித்து வந்தோம். ஆனால், அரசாங்கத்தின் தற்போதைய பயணம் பல முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. யுகதனவி ஒப்பந்தம், மற்றும் திருகோணமலை உடன்படிக்கை போன்றவற்றில் எமது முழுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றோம். எமது நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறவில்லை, பின்வாங்கவும் இல்லை. என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வெடி,பரிஸ் ஜெயராஜ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு